# புதுத்தெமி

திங்கள் வெளிய

★ பங்குனி 1989 ★





புததெமிழ் ஆசிரியர்

மு. திருஞானசேகரம்

விலை ரூ. 5-00

# புத்தெழில்

என்னை நன்றாய் இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே – திருமூலர்

எழில் 1 மாசி 1989 துளிர் 5


## நடமாடும் பல்கலைக் கழகம் ஒன்று மறைந்தது

சுன்னாகம் குமாரசாமிப் புலவரை நடமாடும் நூல் நிலையம் என்று கூறப்பட்டதுண்டு. ஏனெனில் அவர் பல வகையான நூற் கடலுள் புகுந்து அங்குள்ள உண்மை மணிகளாகிய முத்துக்களைச் சேர்த்து வைத்திருந்து அவற்றை வேண்டியவற்றுக்கு விளக்கு வார். இதனால் அவர் அவ்வாறு அழைக்கப்பட்டது பொருத்தமே.

குறிப்பிட்ட சில காலத்திற்கு முன்பு. யாழ்ப்பாணத்தில் தடுக்கி விழுவதாயின் ஒரு பண்டிதரில் என்று கூறிய சிறப்பு உண்டு. அந்த அளவிற்குப் பண்டிதர்கள் பலர் உருவாகியிருந் தனர். இந்தப் பண்டிதர்களை உருவாக்கியவர் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள். பண்டிதமணி அவர் கள் பல பண்டிதர்களை உருவாக்கிச் சிறப்புற்றது போன்று அவ ரிடம் படித்தவர்கள் பண்டிதமணியிடம் படித்தோம் என்று பெருமையுடன் கூறுவர், இந்த வகையில் அவர் வரிசையில் சிறப்புறுபவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களே.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதல் துணை வேந்த ராகவே விளங்கியுள்ளார் இன்று யாழ்ப்பாணத் தமிழ் அறிஞர் களில் பலர் அவரின் மாணவர்களே. மறைந்த கைலாசபதி அவர் களும் அன்னாரின் மாணவரே என்பதும் குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக பல்கலைக்கழக வளர்ச் கு பெரும் பணியாற்றிய பேராசிரியர் தாமும் ஒரு பல்கலைக் கமாகவே விளங்கினார் என்றால் மிகையாகாது. அவர் கலந்து கொள்ளாத தமிழ் விழாக்களோ, ஆராய்ச்சி மாநாடுகளோ, இல்லையெனலாம்.

தமிழ் அன்னையை அழகுபடுத்தும் பல நூல்களையும் எழுதியுள்ளார். வளாகமாக ஆரம்பிக்கப்பட்ட யாழ் பல்கலைக்கழகம் பல்கலைக்கழகமாக உயர வித்தியானந்தனின் அயரா உழைப்பும் காரணம் எ பதோடு பல தொல்லைகள் நிறைந்த கால கட்டத்திலும் சளைக்காது பணியாற்றி யாழ் பல்கலைக்கழகம் சிறப்புற இயங்கச் செய்தவர். யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தை நிலைநாட்டியவர். பல சோதனைகள் வந்த போதிலும் விட்டுவிலகாது நின்று பணியாற்றிய பேராசிரியர். சி ந்த கல்விமான், தமிழ் அறிஞர், பல அ ஞர்களின் ஆசானாக விளங்கி எல்லாத் தரப்பினரையும் காய்த்தல், உவத்தல் இன்றி அரவணைத்து வளர்த்த பெருந்தகையாளர். அத்தகையவரான பேராசிரியர் வித்தியின் மறைவு ஈடுசெய்ய முடியாதது.

---


உங்களுக்கு சொகுசான பாதணிகள்
பெற்றுக் கொள்வதற்கு

**நியூ தீபாவை நாடுங்கள்!**

மற்றும் அன்பளிப்புப் பொருட்கள்
பாடசாலைப் பிள்ளைகளுக்குத் தலையான
சப்பாத்து வகைகளும்,
நவநாகரீக நங்கையருக்கு ஏற்ற காலணிகளும்
பெற்றுக் கொள்வதற்கு தீபாவை நாடுங்கள்

**நியூ தீபா**

கிளை: **நியூ பிரசாந்**
பஸ்தரிப்பு நிலையம்
அச்சுவேலி

ஆங்கில மருந்து வகைகள், தமிழ் மருந்து
வகைகள், எண்ணெ வகைகள், மருந்துச்
சரக்குகள், குழந்தைகளின் பால்மா,
ஓடிக்கொலோன், பவுடர் வகைகளும்
எவர்சில்வர் பொருட்கள், பாட
சாலை உபகரணங்கள், அழகு
சாதனப் பொருட்கள் அனைத்
தையும் நியாயமான விலைக்
குப் பெற நாடுங்கள்.

பெற்றுக் கொள்ள
நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்

# சாந்தி பார்மஸி

பஸ் நிலையம்
அச்சுவேலி

நம்மிடம் பாடசாலை உபகரணங்கள்
அன்பளிப்புப் பொருட்கள்
அழகுசாதனப் பொருட்கள்

என்பவற்றை மலிவாகப் பெற்றுக் கொள்வதற்கும்
பல வர்ண வாழ்த்து மடல்களுக்கும்.
தினசரி பத்திரிகைகள் பெறவும்

அத்துடன்

★ பாட்டா பாதணிகள்
★ பிளாஸ்ரிக் பொருட்கள்
★ எவர்சில்வர் பாத்திரங்கள்
★ லாஸ்ரிக் நூல் வகைகள்

என்பவற்றை மலிவாக பெற்றுக்கொள்ள
நாட வேண்டிய ஸ்தாபனம்

# விநாயகர் ஸ்ரோஸ்

புத்தூர்

# இந்த இதழில்.....

புத்தெழிலுக்கு வாசகர்களின் ஆதரவு நாளுக்கு நாள் பெருகி வருவது கண்டு உள்ளம் பெருமிதம் அடைகின்றது. ஊக்கம் பிறக்கின்றது. புத்தெழிலுக்கு எழுதும் படைப்பாளி களுக்கே இப்பெருமை உரியது. தரமான படைப்புக் களை புத்தெ ழில் வழங்க வாசகர் பாராட்டைப்பெற அத்தகைய படைப் பாளிகளே காரணம். அவர்களுக்கு என்றுங் கடன்பட்டவர்களா வோம். அந்த வகையில் இந்த இதழிலும் சிறந்த படைப்புக்களை படைத்தளித்திருக்கின்றார்கள்.

எழுத்துலக வாழ்க்கை பற்றி தொடர் கட்டுரையை தெல் லியூர் நடராசனின் கட்டுரைக்கு தொடர்ச்சியாக வாசகர்களிட மிருந்து வரவேற்புக் கிடைத்திருப்பதால் அவர் கட்டுரையை இந்த இதழிலும் தொடர்கிறோம்

சென்ற இதழில் தொடங்கிய திருமதி கோகிலா மகேந்தி ரனின் 'முதுகில் ஊரும் தம்பலப்பூச்சி' இவ்விதழிலும் தொடர் கின்றது. இக்கதையை தொடக்கத்திலேயே வாசகர்கள் வரவேற் றுள்ளனர்.

'நிரப்பமுடியாத இடைவெளிகள்' என்ற சிறுகதையை திருஞ என்பவர் எழுதியுள்ளார். சமுதாயத்தில் நிகழும் பிரச் சினைகளை மையப்படுத்தி இச்சிறுகதையை எழுதியுள்ளார்.

சென்ற இதழில் அறிமுகமான மு. சந்திரசேகரத்தின் கவி தையும் இடம்பெறுகின்றது.

மண்ணின் மணம் என்னுஞ் சிறுகதையை திருமதி சந்திரா இரவீந்திரன் எழுதியுள்ளார். கார்த்திகை மார்கழி இதழில் இவர் 'தாண்டவம்' என்ற சிறுகதையை எழுதியிருந்தார். அதில் சந் திரா இரவீந்திரன் என்பதற்குப் பதிலாக இந்திரா இரவீந்திரன் என தவறுதலாக வந்துவிட்டது. இவர் வளர்ந்து வரும் சிறந்த எழுத்தாளர்.

'தெடுந்தீவு லக்ஸ்மன்' இந்த இதழிலும் தம் கவிதையைப் படைத்துள்ளார்.

...மிழ் மூதாட்டியின் வாழ்த்து' என்ற இலக்கியக் கட்டு இடம்பெறுகிறது.

இவற்றுக்கு மேலாக இலக்கிய ஈடுபாடு மாணவர்களுக்கும் ஏற்பட வேண்டும் எதிர்காலம் அவர்கள் கையில். இதனால் அவர்களுக்கும் பயன்படுமாறு மாணவர் பகுதியை ஆரம்பித்து, அவர்களும் பயன்படும் வகையில் 'சென்மதி நிலைவை' என்ற பொருளியல் கட்டுரையை பிரபல பொருளியலாசிரியர் திரு. லோகசிங்கம் எழுதியுள்ளார்.

பல சிறந்த ஆக்கங்களை இந்த இதழிலும் இடம் பெறச் செய்துள்ளோம் எமது தொடர்ச்சியான செயற்பாட்டுக்கு வாசகர் ஆதரவு தேவை கருத்துக்களைக் கூறுங்கள்.

— ஆசிரியர் —

## கேள்வி பதில்

பல வாசக அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க கேள்வி பதில் என்னும் பகுதியை ஆரம்பிக்க உள்ளோம். வாசகர்கள் தரமான பயனுள்ள கேள்விகளை அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி

மு. திருஞானசேகரம்
ஆசிரியர்
புத்தெழில்
அறிவொளி வீதி
புத்தூர்



# காளி தருவாள்

எண்ணில்லாத பொருட்குவை தானும்
ஏற்றமும் புவி யாட்சியும் ஆங்கே
விண்ணில் ஆதவன் நேர்ந்திடும் ஒளியும்
வெம்மையும் பெருந்திண்மையும் அறிவும்
தண்ணிலாவின் அமைதியும் அருளும்
தருவள் இன்றென தன்னை யென்காளி;
மண்ணிலார்க்குந் துயரின்றிச் செய்வேன்
வறுமையென்பதை மண்மிசை மாய்ப்பேன்

தானம் வேள்வி தவங்கல்வி யாவும்
தரணி மீதில் நிலைபெறச் செய்வேன்
வானம் மூன்று மழைதரச் செய்வேன்
மாற்லாத வளங்கள் கொடுப்பேன்
மானம் வீரியம் ஆண்மை நன்னேர்மை
வண்மை யாவும் வழங்குறச் செய்வேன்
ஞானமோங்கி வளர்ந்திடச் செய்வேன்
நான் விரும்பிய காளி தருவாள்

# தங்கைக்கு ஒரு மடல்

அன்புத் தங்கை மணிமேகலைக்கு,

நான் எழுதும் அன்பு மடல்

நாளைய உலகின் சிற்பிகளில் நீயும் ஒருத்தி உன்னை எதிர்பார்த்துப் பல கடமைகள் உள. உன்னை எதிர்பார்த்து உலகம் நாடு, சமுதாயம், உள்ளன. அந்த எதிர்பார்ப்புக்கு அமைய உன்னை இயைபுபடுத்திக் கொள்கின்றாயா?

என் உயிரனைய தங்கையே! நின் அன்பு தவழும் முகம் கள்ளங்கபடம் அற்ற உள்ளம் முல்லைச்சிரிப்பு, எதனையும் நுணுகி நோக்கும் வேல்விழி, பிறர் துயர்கண்டு உருகும் பண்பு இவற்றுடன் கொடுமை கண்டு பொங்கும் நீர்மை இவையனைத்தும் பாரதியின் புதுமைப் பெண்ணாய் உன்னைக் காட்டுகின்றன. எனக்கு உன்மீது பெரிய நப்பிக்கை உண்டு. நீயும் வாழ்ந்து ஏனையோரையும் வாழ வைப்பாய் என்பதே அந்த நம்பிக்கை.

மேல்நாட்டு நாகரிகம் கலாசாரம் நம்தமிழ்கலாசாரத்தை அழிக்கக் கங்கணம் கட்டி நிற்கும் வேளையில் அந்த அலைக்குள் அகப்படாமல் தமிழ்ப்பண்பாடு பேணும் தங்கையே! நீ ஏனையவர்களிலும் மேம்பட்டவள் தமிழ்ப் பண்பாட்டின் எடுத்துக்காட்டாய் தமிழ்ப் பெண்ணாய்க் என் அருமைத் தங்கையைக் காணும் போது என் உள்ளம் பூரிப்படைகின்றது. மேலைத்தேய நாகரிகங்களை மொழியை அறிந்து கொள்ள வேண்டும். ஆனால் அவற்றுக்கு அடிமையாகக் கூடாது. இன்று பலர் தாய்மொழியான தமிழ் மொழியைப் படிக்கவோ பேசவோ நாணுகின்றனர். இது தவறு பலரிடம் ஆங்கில மோகம் உண்டு இந்நிலை நீடித்தால் பாரதி

"மெல்லத் தமிழினிச் சாகும் அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்" என்று பாடியது உண்மையாகி விடுமோ என்று அஞ்சாமல் இருக்கமுடியுமா? ஆகவே "சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே - அதைத் தொழுது படித்திடடி பாப்பா" என்ற பாரதியின் பாடலுடன் நிறுத்தி மீண்டும் முடிந்தால் அடுத்த மடலில் பல விடயங்களை விரிவாக எழுதுகிறேன் எனக்கூறி அமைகின்றேன்.

இங்ஙனம்
அன்புடன்
தமிழ்தாசன்

**எழுத்துலக வாழ்க்கை 3**

# தாய்தந்த தனம்

இளமை முதல் அன்னையின் அடிபற்றி நடந்துவந்த எமக்கு பாலபாரதம், பாலராமாயணம், பாலஸ்காந்தம் போன்ற புத்தகங்களிலிருந்து கதைகளை ஆய்ந்தெடுத்துக் கூறிய அன்னையார் ஒவ்வொன்றுக்கும் தந்த விளக்கங்களை நாம் அப்பொழுது உணரமுடியாத போதிலும் பின்னர் அவற்றின் மாண்பை நன்குணர்ந்தோம். ஆத்திசூடிக் கவிதைகளுக்கு அன்னை தந்த விளக்கங்கள்தான் இந்துசாதனம் பத்திரிகையில் ஒரு காலத்தில் அத்தலைப்புகளில் கட்டுரைகளாக எம்மால் வடிக்கப்பட முடிந்தன. இராசாதேசிங்கு கதைகள் முதல் வீரசிவாசி ஈறாக, இடையில் விக்கிரமாதித்தன், மரியாதைராமன் கதைகள், அவிவேக பூரணகுரு கதைகள் போன்றவற்றை அன்னையார் இலகுவாக விளக்கி வைத்ததுடன் யாழ்ப்பாண சரித்திரக் கதைகள், சிலம்புச் செல்வக்கதைகள் போன்றவற்றையும் இந்தியாவில் புத்தக வெளியீட்டாளர்கோபாலகிருஷ்ணக்கோன் நிலையத்தார் வெளியிட்ட நளதமயந்தி கதைகள், இராமாயணக் கதைகள்,பாரதக்கதைகள்யாவையும் சீராகப் புகட்டினார் இவற்றால் படிக்கும் ஆர்வமும் படித்தவற்றை எழுத வேண்டும் என்னும் ஆர்வமும் பெருகின. அப்பெருக்கோடு புலவமணி எங்கள் தமிழ்குரு திரு சோ. இளமுருகனாரதும் இலக்கிய இலக்கண வித்துவான் திரு. அப்பாக்குட்டி கார்த்திகேசு, அவர் மைத்துனர் திரு. த சண்முகதாசன், பெரிய தாயார் மகன் திரு த சங்கரப்பிள்ளை கந்தையா ஆகியோர் தந்த ஊக்கமும் ஆக்கமும் வழிகாட்டலும் அன்னையின் அளப்பரிய ஆசையை நிறைவு செய்ய எமக்குறுதுணையாக விளங்கின. புத்தகம் வேண்டிக் கொள்ள இயலாவேளைகளில் ''சின்னண்ணர்'' எமக்குதவியவற்றையும் மைத்துனர் திரு. கார்த்திகேசு ஆற்றியவற்றையும் மறக்கவொண்ணாது தொடர்ந்து தமிழே படித்து வந்த எம்மை 1939ம் ஆண்டு தமிழ் கனிஷ்ட பாட தராதரப் பரீட்சையை நாம் எடுத்தபின், அந்த ஆண்டு மார்கழி மாதத்தில் ஆங்கில அரிச்சுவடியைப் போதித்தவர் தாயாரின் தமக்கை மகன் அண்ணை சங்கரப்பிள்ளை கந்தையாதான் ஆங்கிலம் படிக்க வைத்தவரும் அவர்தான் ஊக்கப்படுத்தியவரும் அவர்தான்.

தெல்லியூர்
செ. நடராஜன்

எம்மால் எழுதப்பட்ட ''தமிழன் மாட்சி'' என்னும் நூலில், ''குரங்குகள் போன்று மரங்களில் பாய்ந்து திரிந்த மேலைநாட்டினர்'' என ஒரு வசனத்தை எழுதியிருந்தேன் அந்த வசனத்தை நீக்கிவிட்டு, ''மேலைத் தேசங்கள் காடடர்ந்து, ஆங்கு வதிவோர் சொப்பரிலுலாவி மந்திப் பருவம் நீங்கி, ஈஞ்சு தொழுது வாழ்ந்த அக்காலத்து'' என மாற்றியமைத்தவர் அவர் அதன் மூலம் சொற்களில் கருத்துக்களை பின்னிப் பிணைக்கும் வழியையும் காட்டித் தந்தவர்.

கல்லூரி இலக்கிய மன்றங்களில் பேச்சுப் போட்டிகள் நிகழுங் காலத்தில் அவற்றிலே வெற்றிப் பங்குபெற உதவியவர் திரு. கார்த்திகேசு என்னும் எமது மைத்துனர் ஆங்கிலக் கல்வி கற்க வேண்டிய காலத்து தமிழை நீண்ட காலமாக சற்று வந்த எமக்கு, ''கெமிஸ்தம்'' என்னும் தமிழ் நூலைப் தேடித்தந்து ஆங்கில கனிஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் திறம்படச் சித்திக்க உதவியவர் திரு த. சண்முகதாசன். இந்து சாதனத்தில் அற்றைக் காலத்தில் எமது கட்டுரை கண்டதும் பத்திரிகையோடு எம்மில்லத்தில் முதலில் நிற்பவரும் அவரேதான். எமது இளைய மைத்துனியை (திரு. கார்த்திகேசுவின் சகோதரி) விவாகம் செய்தவர் கட்டுடையைச் சேர்ந்தவர் எமது எழுத்துக்களுக்கு அன்னை போல் ஊக்கமளித்தவர். எமது வகுப்பாசிரியராக இருந்தவரும் பின்னர் மானிப்பாய் இந்துக் கல்லூரி முதல்வராக இருந்து சமீபத்தில் காலம் சென்றவருமான திரு. முத்துவேற்பிள்ளை அவர்களையும் நாம் மறக்கவொண்ணது. எமது இரசாயன, பௌதீக, ஆங்கில, தமிழ் அகராதியை நாம் தயாரிப்பதற்கு முதற் காலாக அமைந்தவர் அவர் 1940ம் ஆண்டில் அவரிடம் விஞ்ஞானப் பாடம் கற்க ஆரம்பித்தபொழுது எமது ஆங்கில அறிவு மிக அற்பமே. அவர் எமக்காக ஆங்கிலத்தில் போதித்தவற்றை மீட்டும் தமிழில் எடுத்துரைத்து அப்பாடத்தைக் கற்பதற்கும் ஊக்கமளித்தார் அவர் ஆற்றிய உதவிதான் ''சிரேட்ட ஆங்கில தராதரப் பத்திரப் பரீட்சையில் (விசேட பகுதி சிறப்புச் சித்திபெற எமக்குதவியது. ஆங்கில கல்வியை மேலும் ஊக்கப்படுத்தி உதவிய அராலி வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திரு. கந்தையா என்பவர் மிகமிகப் பிரதானமாகக் குறிக்கப்பட வேண்டியவர் அவர் எமக்கு ஆங்கிலம் போதிப்பதற்கு கையாண்ட முறைகளை பிறிதோரிடத்தில் விளக்க வேண்டியதாகையால் ஈண்டு அது பற்றிய குறிப்போடு நிற்கின்றோம்.

மாதா தந்த தானத்தை குறிப்பிடும்கால் இடையிடை வேறு விடயங்களும் கலக்கின்றன ஆயினும் அவையும் குறிப்பிட வேண்டியவைகளேயாகும்.

''தெய்வ நம்பிக்கையும் தேசப் பற்றையும் அடிப்படைச் சொத்தாக கொண்டு எங்களை நாம் உருவாக்கினோம். ஆனால், அந்த அடிப்படைகளை நாம் மறந்துவிட்டோம். ஆலயங்களுக்குள் நுழையும்பொழுது அதன் படிக்கட்டுகளைத் தொட்டு வணங்கியே உட்செல்ல வேண்டும்'' என அன்னையர் கூறியிருந்தார். ஆனால் எங்களில் பெரும்பாலானோர் அந்தப் படிக்கட்டுகளைத் தொட்டு வணங்குவதை நான் காணவில்லை. அப்படி வணங்க அவர்கள் மனம் இடந்தரவில்லைப் போலும். எங்கள் பாவக் கரங்கள் கைகூப்பி வணங்கக்கூட இடந்தராத நிலைமை பெருகி வருகின்றது இவற்றுக்கெல்லாம் காரணம் பண்டைய பண்பாடுகளை நாம் மறந்து வருவதுடன் அப்பண்புகளைப் போதிக்கும் புத்தகங்களைப் படிக்கும் படிக்காதும் விட்டமைதான். அன்னையார் கூறுவார் இராமாயணம் நாம் ஒவ்வொருவரும் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய நந்நெறிகள் யாவற்றையும் எடுத்தாளு ன்றது. தந்தை – தாய் – கணவன் மனைவி – புதல்வன் – சகோதரன் – நண்பன் – தொண்டன் – எல்லோரும் வாழ வேண்டிய வழிவகைகளை, வாழ்விலக்கணத்தை அழகாக எடுத்தோதுகின்றது வாழ்விலே துன்பமில்லாமல் இன்பமில்லை – இன்பமில்லாமல் துன்பமில்லை அழுபவன் சிரிக்கின்றான். சிரித்தவன் அழுகின்றான். ஏமாற்றமில்லாமல் வெற்றியுமில்லை. பெறுவது எ[illegible]லாமே வெற்றியாக அமைவதுமில்லை எல்லாவற்றையும் சமமாகப் பாவிக்கும் இயல்பை – மனப்பாங்கை எங்களுக்கு அளிப்பது, தருவது இராமாயணக் கதைகள். வாழ்வில் எதனையும் பெற வேண்டுமென்னும் ஆசை – இச்சையைவிட அவற்றினைத் தியாகம் செய்யும் மனப்பான்மையே மிகமிக உயர்வானது. இதனை இராமாயணம் எமக்கு நன்கு தெளிவாக, அறிவுக் கதைகளாக உணர்த்துகின்றது. இராமன் இப்பெயரே இன்பத்தையும் நல்அமைதியையும் எங்களுக்குத் தருகின்றது. இராமன் சரித்திரம் கூறும் இராமாயணம் – அதனைப் படிப்பவர் - படிக்கப்படும் இடங்கள் எல்லாம் இன்பமாக - அமைதியாக இருக்கின்றது. படிப்பவர்களுக்கு தீங்குவராது பாது காப்பாளராக, தொண்டராக அனுமார் இருந்து காக்கின்றார்.

''கடமையைச் செய் பயனைக் கருதாதே'' என்று பகவத்கீதை கூறுவதுபோல, இராமாயணமும் ''கடமையைச் செய்வதே மிகச் சிறந்த பக்தி மார்க்கம்'' என்பதை தெளிவாக உணர்த்துகின்றது. ஆசை வயப்படுபவர் எத்தனை பெரியவராக, உயர்ந்தவராக இருந்தாலும் துன்பத்துக்கு அவர் ஆளாகியே தீருவார் என்பதை இராமாயணம் தெளிவுபடக் காட்டுகின்றது. அமைதியை -- பக்தியை விதைத்து அந்தச் சூழலில் இறைவனைப்பற்றி நினை

னூட்டி எங்கள் வாழ்வில் ஒளிவீச வைக்கின்றது. இராமாயணத்தை வாழ்க்கைத் துணையாகக்கொள்'' என்று விரிவாக தாயார் கூறிய கருத்துப் பொலிந்த சொற்கள் என்றும் நெஞ்சு நிறைந்துள்ளன.

''கொடுப்பதற்கும் அதிகாரம் வேண்டும். பெறுவதற்கும் தகுதி வேண்டும். ஏன் இப்படி எழுதுகிறேன் என ஆச்சரியப்படாதே. பசித்தவனுக்குத்தான் உணவின் அருமை தெரியும். தன்பலத்தை இழந்து நிற்பவனுக்குத்தான் மஹோபலம் தரும் உபதேசம் வேண்டும். சொல், நினைவு, செயல் மூன்றையும் அர்ப்பணித்து, சரணுகதி அடைந்த நிலையில்தான் கடவுளைப் பக்தன் உண்மையாகப் புரிந்து கொள்ளமுடியும். குருக்ஷேத்திரத்தில்தான் கண்ணனை ஞானசிரியனுக ஏற்கும் பக்குவம் அர்ச்சுனனுக்கு வந்தது. அதுவரை கண்ணனை ஞானசிரியனுக சிந்திக்கும் பக்குவம் அர்ச்சுனனுக்கு வரவில்லை. தோழனுகவே அவன் அதுவரை கருதி, நடந்து வந்தான். நினைவு, சொல், செயல் யாவையும் இறைவன் வசம் ஒப்படைத்துவிட்டு சரணுகதியடைந்தாற்ருன் பகவான் அருளுபதேசம் பெறும் வாய்ப்புண்டாகும். மனப் பக்குவம் பெற்ற ஒருவருக்கு, மனமுதிர்ச்சியடைந்தவர்களின் அடையாளமாக விளங்குபவன் அர்ச்சுனன். இவற்றை பாரதத்தை படித்தறிந்து நன்கு புரிந்து கொள்வாய்'' இவ்வாறு அன்னையார் ஒருகால் எழுதியது என்னை வழிநடத்தவே தான் என்பது உண்மையாகும்.

காலை எழுந்து கடன்களை செவ்வனே முடித்து, ஆலய தரிசனம் செய்து வீடுதிரும்பி, குடும்பபாரத்தினைச் சுமப்பது அன்னையின் தினசரி கடமையாகும். வாழ்வில் இறுதிக்கட்டம் வரை அவரது வாழ்வில் அவ்வொழுங்கு மாறியதை நாம் காணவில்லை.

''காலையில் எழுந்தவுடனே, கடமைகளை ஒழுங்காக முடித்து, வீட்டில் வசதியான ஒரு தியான அறையில் தனியாக - அமைதியாக இருந்து, அங்கே ஊதுபத்தி, சாம்பிராணி தூபமேற்றிவைத்து அமைதியாயிருந்து தியானம் செய்வது என்றும் உத்தமம். தியானம் செய்யுமிடத்திலே தரையில் நன்ருக தோய்த்துலரவிடப்பட்ட தூய்மையான ஒரு துணியை நாலாக மடித்துப் போட்டுக் கொண்டு அதன்மீதமர்ந்து தியானம் செய்யலாம். வசதி படைத்தவர்கள் மான் தோலையோ, புலித்தோலையோ உபயோகித்து அதன்மீதமர்ந்து தியானம் செய்யலாம். வசதியில்லாதுவிட்டால் கோரைப் புல் இருந்தாலும் போதும். மணைப் பலகையைக்கூட போட்டுக் கொண்டிருந்து தியானம் செய்யலாம். தியானிக்கும் பொழுதோ பூசையில் ஈடுபடும் பொழுதோ மனமானது வேறு எதனையும் நாடக்கூடாது வேறு எந்தச் சிந்தனையும் எழுதலுமாகாது.

அமர்ந்திருக்கும் நிலைகூட ஒரே செங்கோட்டில் செங்குத்தாக அமையும்படி உட்கார்ந்து கொள்ளுவதே சாலச் சிறந்ததாகும். உள்ளமும் உடம்பும் கட்டுப்பட இந்நிலை பெரிதும் உதவும்.

தியான நிலையில் - முதலில் விக்கினமின்றி கருமங்கள் நடக்க பிள்ளையாருடைய அருளை வேண்டி வழிபடுதல் அவசியம் நலம். விக்கினமில்லாது நடக்கும் சக்திப் பிரவாகம் ஆறுபோல - காற்றுப்போல - கதிரோன் ஒளிக் கதிர்போல பிரவாகிக்கும். ஆதி பராசக்தி அகிலம் காக்கும் அருட்பெரும் சக்தி மாதா. தன் ஒப்பற்ற சக்தி வடிவமாக உலகுக்கு மாதா அளித்த மாபெரும் பலந்தான் விக்னேஸ்வரர். அந்தச் சக்தியை தினமும் காலையில் முதலில் வணங்குக, வழிபட்டு வருக. ஆலயத்துக்கு வழிபாட்டுக்குப் புறப்படும் பொழுதும் பிள்ளையாரை, விக்கினங்கள் தீர்ப்பவரை வழிபட்டே புறப்படுதல் வேண்டும். அவரை மனத்துள் தியானித்துக்கொண்டு புறப்பட்டால் எல்லாம் சுபமாகவே நிறைவு பெறும்

''பிள்ளையாரை முதலில் வழிபடுதலால் நமக்கு தைரியம் மனோபலம் தெளிவு ஏற்படுகின்றது. உலகிலே இன்றுள்ள மிருகங்களில் மிகப் பெரியது யானை. அதன் அறிவும் ஞாபக சக்தியும் மிகமிக அதிகம். எதனையும் சாதிக்கும் உடல்வாகும் அதற்கு மிகுதியாகவுண்டு அறிவு - ஞாபக சக்தி - உடல்வலிமை யாவும் இருப்பின் எக்கருமத்தையும் எம்மால் சாதிக்க முடியும்.

இந்தச் சாதனைக்காகவே தான் நாம் ஆனைமுகனை முதலில் வேண்டுகின்றோம். செய்காரியங்கள் விக்கினமின்றி நிறைவேற நாம் விக்கினேஸ்வரனை வழிபடுகின்றோம். வேதாந்த அடிப்படைகளை இப்பொழுது எடுத்துக்கூறி உனக்கு விளங்க வைக்க முடியாது. காலம் வரும்பொழுது காரிய சித்திகளை அடைவதற்கான தத்துவங்களையெல்லாம் நீயே புரிந்து கொள்வாய். தெரிந்து வழி நடப்பதோடு மற்றவர்களுக்கும் காரிய சித்திக்கு வழியும் காட்டுவாய். நம்பிக்கை கொண்டு நாம் எந்நாளும் தும்பிக்கைநாதனைத் துதித்தால் நலங்களெல்லாமே பெருகிடும்'' என்றெல்லாம் அன்னையார் அன்று எமக்குரைத்தார்.

உண்மை பொதிந்த வாசகங்களின் கருவூலங்களை எமது வாழ்வில்நாம் நிதர்சனமாகவே அனுபவித்துள்ளோம். ஆதவனைக் கண்டு பனி விலகியதுபோல எழுந்த பல துன்பச் சுமைகள் தும்பிக்கை நாதன் அருளால் பனிபோல் விலகியதுண்டு. எங்கள் தந்தை வழி முன்னோர் எல்லா இடங்களிலும் பிரணவநாதருக்காலயங்களைச் சமைத்து வழிபட்டு வந்துளர்.

இற்றைக்கு எழுநூறாண்டுகளுக்கு முன்னதாகவே எம்முன்

கூறுராய ஸ்ரீநடராஜர்பார் என் பலவூர்களில் விக்னேஸ்வரராலயங்களைத் தாபித்தும் அவற்றின் பராபரிப்புக்கு பல்வேறு ஆதன நன்கொடைகளை வழங்கியும் செயற்படுத்தியுள்ளமையை சரித்திர ஆய்வுகளை நாம் மேற்கொண்டபோது பரக்கக் கண்டுள்ளோம்.

“ஸ்ரீநடராஜர் அம்பலவாணர் விநாயகமூர்த்தி கோயில்” இன்றும் நின்று நிலவுதலை இதற்கு ஒரு ஒப்பற்ற சான்றாக குறிக்கலாம். போத்துக்கல், டச்சு நாடுகளின் கண்ணுள்ள புராதனப் பொருள் வைப்பகங்களில் உள்ள சான்றேடுகளில் இப்பொரும் கருவூலங்கள் பொதிந்திருப்பதை கண்ட பல பெரியோர் எமக்கு தெரிவித்த காலத்து அந்நாடுகளுடன் தொடர்பு கொண்டு இவ்வுண்மைகளை அறிய வந்தோம். இவையெல்லாம் சரித்திர சம்பந்தமான ஆய்வுகள் வெளிவரும் பொழுது மக்கள் முன் படைக்கப்படும். அன்று அன்னையார் கூறிய வாசகங்கள் உளத்தே பதிந்தமையால், புதிய ஒரு குறட்பாவை ஆக்கி எமது குருநாதருக்கு எழுதிய கடிதத்தில் 1936ல் பொதித்திருந்தேன்.

“நம்பிக்கை கொண்டவர்க்கும் நாடித் துதிப்பவர்க்கும்
தும்பிக்கை நாதன் துணை”

மேற்போந்த குறளைப் பாராட்டி அப்பெரியார் எழுதிய கடிதம் அவர் பற்றிய குறிப்பில் வெளியிடப்படும். இக்குறளை குறிப்பிடும் வகையில் அன்னையார் குறிப்பிட்ட வேறும் ஒரு விடயம் ஈண்டு ஞாபகத்துக்கு வருகின்றது. வள்ளுவப் பெருந்தகை கூறிய, “வரழ்க்கையை சீராக - ஒழுங்காக வாழ்ந்து தன் கடமைகளை செவ்வனே சீராகச் செய்து வாழ்பவன் இறைவனை அச்செய்கை மூலம் பணிகின்றான். இப்படிக் கடமையைச் செய்பவன் வெளிப்படையாக இறைவனை சரணடையவில்லையே தவிர அவன் தனது மக்கள் கடமை மூலம் - சேவை மூலம் இறைவனுக்குத் தன்னையே அர்ப்பணிக்கின்றான்” இதனை மறவாது வாழ்வில் உன் கடமைகளை - பெற்றோருக்காகட்டும் - சகோதரங்களுக்காகட்டும் அல்லது பொது தாபனங்களாகட்டும் மக்களுக்காகட்டும் கடமைகளை ஒழுங்காக விருப்போடு, உணர்வோடு ஆற்றி வருக உன் வாழ்வில் மலர்ச்சி பெருகும்” என்றோதிய வார்த்தைகள் இன்றும் எமக்கு உறுதுணையாக உள்ளன.

●

---


புத்தெழில் இங்கே கிடைக்கும்.

**உதயன் புத்தகசாலை**

பிரதான வீதி, பருத்தித்துறை

# நிரப்ப முடியாத இடைவெளி

வெளிநாட்டிலிருந்து மகனின் கடிதம் வந்ததிலிருந்து காலில் சில்லுப் பூட்டியவர் போன்று ஓரிடத்திலும் நில்லாமல் அங்குமிங்குமென்று அலைந்து திரிந்து வந்த இராமலிங்கத்துக்கு மனைவி தங்கத்தின் கேள்வி மிகுந்த எரிச்சலை மூட்டியது. எப்போது அவர் வீட்டிலிருந்து கிளம்பினாலும் "அந்த அலுவலையும் கவனியுங்கோ" என்பதும் திரும்பும்போது சொன்ன அலுவல் என்னமாதிரி என்பதும் அண்மைக் காலமாக தங்கத்தின் வழக்கமாகிவிட்டது. மனைவிக்கு மட்டுமென்ன அவருக்குமே அதுதான் சிந்தனை.

சாதாரண பொருளாதார நிலையிலிருந்த இராமலிங்கத்தின் குடும்பம் இன்று அந்த ஊரிலேயே பணச் செழிப்புடன் உள்ளது. அவரின் இரண்டு மகன்மாரும் வெளிநாட்டில் இருப்பதனால் அவரும் குடும்பமும் செல்வச் செழிப்பில் புரள்வது ஆச்சரியம் இல்லைத்தான். அதிலும் மூத்தமகன் நாலு வருடமாகக் கனடாவில் உழைப்பதும் இளைய மகன் ஜேர்மனியில் அகதியாக பணம் சம்பாதிப்பதும் சேர்ந்து குடும்ப வளர்ச்சிக்கு உதவியதோடு பல காணிகளைச் சொந்தமாக்கிக் கொள்ளவும். இரண்டு பெண்களுக்குமாக இரண்டு வீடு கட்டவும் நகைகள் வாங்கவும் உதவியதோடு வட்டிக்குக் கொடுத்து அதன் மூலம் பணந் திரட்டவும் உதவியது

'பணம் பாதாளம் மட்டும் பாயும்' என்பது இன்று முற்றிலும் பொருத்தமென்றே சொல்லலாம். வெளிநாட்டு வேலை வாய்ப்பு பலரிடம் பணப்புளக்கத்திற்கு வழி செய்துள்ளது. அனேமாக குறித்த ஒரு கால எல்லைக்குள் நாட்டுச் சூழ்நிலையை தமக்குச் சாதகமாக்கிக்கொண்டு ஐரோப்பிய நாடுகளுக்கு இளைஞர்களும், யுவதிகளும் ஏற்றுமதியானதால் பணம் வந்து சேர்ந்துவிடுகிறது ஆனால் இப்பணம் ஏனையோரைத் துன்பத்துக்குள்ளாக்கின்றது.

★ ★ ★

உலகம் இயந்திர மயமாகி மனிதர் எல்லாம் மேலைநாட்டு நாகரிகத்திற்கு அடிமைப்பட்டு ஆடம்பரத்திற்கு மயங்கியிருக்கும் காலகட்டத்தில் எவ்விதத்திலும் அலட்டிக் கொள்ளாமல் எளிமையாகவும், அமைதியாகவும் வாழ்பவர் கந்தசாமி மாஸ்ரர்.

திருணை

உத்தியோகத்திற்கேற்ற பண்பும் அறிவும் நிரம்பியவரான மாஸ்ரர். போராட்டத்தில் ஈடுபட்ட ஒரே மகன் இறந்ததும் மிகவும் ஆடிப்போய்விட்டார் வாழ்க்கையில் பிடிப்பில்லாத ஒரு நிலையில் இருந்த அவரால் மூன்று பெண்களும் வயது வந்தவர்களாகி கல்யாணத்திற்குத் தயாராக நின்றபோது, சும்மா இருக்க முடியவில்லை. அப்படி இருக்க முனைந்தாலும் ஊரோ மனைவியோ விடுவதாயில்லை

சாதாரண பாடசாலை ஆசிரியரான கந்தசாமி தன் வருமானத்தைக் கொண்டு சிக்கனமாக வாழ்ந்து பிள்ளைகளைப் படிக்க வைத்ததுடன் ஒரு சிறு தொகையைச் சேமிக்கவுஞ் செய்தார். ஆயினும் அவரின் தோட்டம் ஒரு பெண்ணைக் கரைசேர்க்கவும் போதாதென்றுதான் சொல்லலாம். இந்தக் காரணத்தினாலோ என்னவோ, மூத்த மகளுக்கு இருபத்தியொன்பது வயதாகியும் ஒருவனைத் தேடாமல் இருந்தவர். மனைவி புவனத்தின் நச்சரிப்பைத் தாங்காமல் தரகர் பொன்னம்பலம் மூலம் தன் இயல்புக்கேற்ற ஆனால் பண்பான மாப்பிள்ளையைத் தேடிப் பிடித்தார்.

மகளுக்குச் சீதனமாக நகையும்: சிறுதொகைப் பணம், காணியும் மாப்பிள்ளை வீட்டாரால் கேட்கப்பட்டதாயினும் அவர்கள் கேட்டது மாஸ்ரர் வசதிக்குட்பட்டதாகவே அமைந்தது நகையுடன் பணமும் தான் குடியிருக்கும் காணியில் தன்னால் வாங்கப்படாதிருக்கின்ற மிகுதிக் காணியை வாங்கிக் கொடுக்கலாமென்ற எண்ணத்தில் அவர்கள் கேட்டதற்குச் சம்மதித்தார்.

மாப்பிள்ளை விலையுடன் போட்டியிட்டு உயர்ந்து வருவது காணியின் விலை வெளிநாட்டு வருமானத்தால் பலரும் காணிகள் வாங்கப் போட்டி போடுவதால் காணியின் விலை அதிகரிப்பது தவிர்க்க முடியாதது தான் இந்தப் போட்டியில் முதன்மை பெற்றவர் இராமலிங்கம். இதுவரை ஏராளமான காணியை வாங்கினாலும் அவருக்குக் காணி வாங்கும் ஆசை கொஞ்சமுங் குறையவில்லை அதற்குப் பதிலாக வளருகின்றதென்றே கூறலாம். இதனால் மூத்தமகனுக்கு காசுக் கெழுதிஅவனும் அனுப்பியதோடு மூத்தமகளின் கல்யாணமும் ஒப்பேறிப் போனதாலும் நெடுநாளாய் கண் வைத்திருந்த கந்தசாமி மாஸ்ரரின்ரை வீட்டோடை சேர்ந்த ஆறுபரப்புக் காணியை வாங்கும் முயற்சியில் இறங்கி காணிச் சொந்தக்காரன் உலகநாதனைச் சந்தித்து விலையும் பேசி முடிந்துவிட்டது ஆனால் கந்தசாமியர் பராமரித்து வந்தால் கதை வெளியானால் வாங்க முடியாமல் போய்விடும் என்பதால் இராமலிங்கம் எல்லாவற்றையும் இரகசியமாகவே வைத்திருந்தார்

மகளின் கல்யாண அலுவல்களில் ஓடியாடித் திரிந்த கந்தசாமி மாஸ்ரர் தன்னைச் சுற்றிப்

பின்னப்படு சூழ்ச்சி வலையை யோ தன் நம்பிக்கையில் மண் விழப்போகின்றது என்பதையோ அறியாதவராகத் தன் கவனம் எல்லாவற்றையும் கல்யாண காரியத்திலேயே செலுத்தி ஞர். இதனுல் உலகநாதன் திடீரென வந்து சொன்னது பேரதிர்ச்சியைக் கொடுத்தது.

"மாஸ்ரர் நான் மிச்சக்காணியை விற்கப் போறன் நீங்கள் எழுதினகாணியை அடைக்கி அடைச்சுக் கொண்டு மிச்சத்தை விடுங்கோ"

மகளின் கலியாணத்தைமுதன்மைப் படுத்தியவருக்கு எதிர் பாராத இப்பிரச்சினை சிக்கலைக் கொடுத்தது உலகநாதன் சொன்னபடி ஆடைக்கி அடைக்கமுடியாது ஏனெனில் அதைத்தான் மகளுக்குச் சீதனமாகக் கொடுக்க இருந்தவர் கலியாணத்திற்குச் செலவு அதிகமானதால் காணி எழுதுவதை பின்னர் கவனிக்கலாம் என்று நம்பியவருக்கு அந்த நம்பிக்கை சிதறிவிட்டது.

காணி எழுதுவதைப் பிற்போடமுடியாதென்பதை உணர்ந்த மாஸ்ரர் மகளின் கல்யாணத்திற்கான நகை, பணம் போக எஞ்சிய மனைவியின் இரண்டொரு நகைகளை நம்பி காணியை எழுத எண்ணி.

"நீங்கள் விற்கிற காணி அதோடைநான்பராமரித்துவாற காணி முன்னமே கேட்டது தானே விலையைப் பேசித்தாருங்கோ"

உலகநாதனுக்கு இராமலிங்கம் கேட்டது நினைவிருந்தாலும் இவ்வளவு நாளும் கந்தசாமி தன்னுடைய காணிமாதிரி அடைத்துப் பராமரித்து, முந்தின நாலு பரப்பும் வாங்கினது என்றதாலும் அவருக்குக் காணியைக் கொடுப்பதில் பிரச்சினையில்லை என உணர்ந்து,

"நீங்கள் வாங்கிறதென்டால் உங்களுக்கே தாறன் உடன் எழுதவேணும் பரப்பு பத்தாயிரம்" என்ருர். அக்கம்பக்கத்தில் காணி ஏழாயிரம் எண்ணாயிரம் தான் போகின்றது. இது மாஸ்ரருக்குத் தெரியும் ஆனாலும்தான் மறுத்தால் இன்னொருத்தன் வாங்கத்தயாராக இருக்கும் போது அவர் எதுவும் பேசுவில்லை கெனமாகிவிட்டார், மூளை குழம்பியது திடீரென்று பணத்துக்கு என்ன செய்வது.

"தான் ஒன்றை நினைக்க தெய்வம் ஒன்றை நினைக்கும்" என்பது போல கந்தசாமி மாஸ்ரருக்கும் இதே நிலைதான் ஏற்பட்டது. மகளின் கல்யாண விடயத்துடன் உலகநாதம்பிள்ளையின் காணிப் பிரச்சனையும் அவருக்கு இருந்த போதிலும் எப்படியோ காணிக்குரிய பணத்தைப் புரட்டி காணி எழுதத்தயாராக இருந்தவருக்கு உலகநாதம்பிள்ளையின் அடுத்த அடி அதிர்ச்சியை அளித்தது. தன்னுடையவாயாலேயே பத்தாயிரம் என்று சொன்ன காணியை இப்ப பதினேழுக்கும் குறையத் தரமாட்டேன் என்ற

தை அவர் சிறிதும் எதிர்பார்க்க வில்லை தொடர்ந்தும் உலகநாத னே சொன்னார் ''இஞ்சை பாரு ங்கோ மாஸ்ரர் என்னைக் கோபிக் கக் கூடாது.

''நானும் கூடக் கொடுக்கத் தானே விரும்புவன்' உலகநா தப்பிள்ளை சொன்னதைக் கேட்டு கந்தசாமி தன்னைத் தான் நொந்து கொண்டார்.

மனிதர்களின் வார்த்தையை நம்பியதை எண்ணி மனிதாபி மானம் என்பது பணத்திற்கு முன்னால் செல்லாக்காசு வெளி நாட்டுப் பணம் மனிதனையே விலைக்கு வாங்கப் பயன்படுவ தோடு ஏழைகளின் வாழ்க்கை யில் அடிப்பதோடு நிரப்ப முடி யாத இடைவெளியையும் ஏற் படுத்துகின்றது என்பதை அவர் உணர்ந்தார். மகளுக்குத் தருவ தாகச் சொன்ன காணிக்கு என்ன செய்வது? என்ற எண் ணம் அவர் மனதை வாட்டியது. இராமலிங்கத்தின் பணச் செழிப் புக்கான காரணத்தை நினைத்துப் பார்த்த மாஸ்ரருக்கு தன் மக னும் இன்றிருந்தால் என்று எண் ணாமல் இருக்க முடியவில்லை. தன் மகனை எண்ணிப் பெருமைப் பட்ட மாஸ்ரர் இன்று இப்படி நினைப்பது ..... ....... ?


சகல விதமான
ரெடிமேட் ஆடைகளுக்கும்
புடவை வகைகளுக்கும்
குழந்தைகள் சிறுவர்களுக்கான
ஆடை வகைகளுக்கும்
சிறந்த ஸ்தாபனம்
காவேரி ரெக்ஸ் ரைல்ஸ்
பஸ் நிலையம்
அச்சுவேலி

# ஒரு இதயம்

# ஒரு உருவம்

மு. சந்திரசேகரம்

இரவின் அமைதியில் எல்லா உயிர்களும்
இணைந்து நின்றன எங்கும் நிசப்தம்
புழுதிப் புதைவுள் கற்களின்மீது கால்கள்
புரளும் கடகடப்பு மெல்லக் காதில் கேட்கும்,
இரவுத் திரையின் ஓட்டை கிழிவால்
உள்ளே இருக்கும் உயிர்களின் சாயல்
நிழல்கள் உருவாய்க் கண்ணில் தெரியும்
காட்சிகள் ஒன்றும் அமைதியில் இணையும்.
எனினும்,
வாழ்க்கைப் பாலையில் விதியின் வெம்மை
ஏக்கப் பெருமூச்சாய் நிசப்தத்தை அணைக்கும்
ஆசை நிராசையாய், ஏக்கம், தவிப்பாய்
இதயப் புண்ணில் இருக்கும் உழைவு
அந்த இரவின் அமைதியில் கூட
மாறுது,
நடக்கும் உயிருடன்
இணைந்தே நடந்தன,
இரவின் அமைதியில் எல்லா உயிர்களும்
இணைந்தே நின்றன எங்கும் நிசப்தம்.

# முதுகில் ஊரும் தம்பலப் பூச்சி

அன்பு நிறைந்த அஞ்சுகா,

"உங்களை எல்லாம் பொம் பிளைங்கண்ணு மரியாதை குடுத் துத்தான் உள்ளை உக்கார வைச் சிருக்கோம், யாரும் வாயைத் திறந்து கத்தினீங்க அப்புறம் இதுதான் உங்ககிட்ட வரும். பாதிப்பேர் செத்துத் துலைவீங்க .. மீதிப்பேர் உண்மை சொல்லு வீங்க..."

கோயிலுக்குள்ளே சிறை வைக்கப்பட்டது போல் நாங்கள் சுற்றிவரக் கோயில் மதில்! அதற்கு வெளியே ஆயுதங்களை உள்நோக்கி நீட்டியபடி அவர் கள்.

உடம்பு படபடக்க விழித் துக் கொண்டேன் அந்த நினைவு மனதைவிட்டு அகல மறுத்து நிலைக்கிறது.

எனக்குப் பக்கத்தில் இருந்த வதனி சற்றுப் பலமாகவே சொல் லிக் கொள்கிருள்.

"வைரவ சுவாமி, நீர் எத் தினை அற்புதங்களைச் செய்த னீர்? இன்டைக்கும் அற்புதம் செய்ய மாட்டீரா? ஐயோ இந்தக் கிராமத்துச் சனங்களை எல்லாம் இப்பிடியே உம்மடை வாசலிலை வைச்சு அழிக்கவிடப் போறீரா? .."

தலையைக் கீழே போட்டு அழுது கொண்டிருந்த பெண்கள் பலர்! நானுந்தான்!

அற்புதம் நடந்ததுதான்!

கிராமத்தின் வடமேற்கு எல் லையில் அமைந்த பொற்கலந் தம்பை வைரவர் கோயிலில் அன்று யாரும் இறந்து போக வில்லை.

ஆனல் அது அப்படித்தான் எல்லா இடமுட நடந்தது என்று நீ விளங்கிக் கொண்டால்... உனக்குப் புத்திக்கூர்மை குறைவு!

நான் சிறு குழந்தையாக இருக்குப்போது அப்பு சொல்லு வார், "குமரத்தி காலத்திலே மேலை .. உந்தக் கோயிலின்ரை குளத்தை இரண்டு பேர் வெட் டிப் பார்த்தவையாம்!"

"என்னத்துக்கு ?"

அப்பு வெற்றிலையைத் துப்பி விட்டுச் சிரிப்பார்.

"உனக்குத் தெரியாதே? உந் தக் குளத்துக்கை பொன் கிடா ரம் பவுண், பவுண் சட்டி, பானை எல்லாம் கிடக்கு... அதை எடுக் கத்தான் "

**கோகிலா மகேந்திரன்**

"பிறகேன் எடுக்கேல்லை..."

"எடுக்க விடுவரே அவர்? ஒருத்தருக்குஒழுக்கொறும்பு கால் மூத்தும் மொய்ச்சு அப்படியே ஈச்சுப் போட்டுதாம்"

"ம் ம்..."

"மற்றவர் சொன்னாராம்.. ஒழுக்கொறும்பு ஒண்டும் செய்யாது நீ இறங்கெண்டு... அவருக்குக் கண் அப்படியே மறைச்சிட்டுதாம்"

அப்ப குளத்துக்கை இப்பவும் அதுகள் கிடக்கோ அப்பு?

"அப்பிடிக் கேக்கப் பிடாது அதுகளைக் கிண்டி எடுப்பமோ எண்டு மனதாலையும் நினைக்கக் கூடாது விளங்கிச்சே?"

எனக்கு விளங்கவில்லை!

அப்பு காணவில்லை ஆனால் இருக்கிறது என்று நிச்சயமாய்ச் சொல்கிறார். அது எப்படி?

அதற்கு மேல்-கேள்வி கேட்டால் அப்பு அடித்து விடுவார். நான் கேட்கவில்லை

இப்போது அப்பு இல்லை கேட்பதற்கு!

ஆனால்...

அந்த அரசமரங்களும் ஆலமரங்களும் அருமையான மணி ஒலியும் அது பொன்மயமான சூழல்தான்!

சந்தேகமில்லை!

ஒக்ரோபர் .. பத்தாம் தேதி நின்று போன மின்சாரம் வரும் என 'ஒப்பிரி மிஸ்ரிக்காக' நாங்களும் எதிர் பார்த்து இன்னும் வந்து சேரவில்லை.

மூன்று மாதமாய் மின்சாரம் இல்லாத இருள்!

மரங்கள் எல்லாம் தளிர்களை இழந்து குருத்துகள் முறித்து அனாதை மனிதர்கள் போலவே தீயில் வெந்து திகைத்து நிற்கின்றன.

மாதக் கணக்காய் ஊரடங்குச் சட்டம் விலக்கப்படாமலே தொடர்ந்த அதிசயத்தை நீ வேறெங்கும் கேள்விப்பட்டிருக்க மாட்டாய்!

சப்பாத்துக்களில் நசிந்த புற்கள் மீண்டும் தலைநிமிரப் பயந்து படிந்து கிடக்கின்றன.

எது ஒப்பிரிமிசம்? எது பெசிமிசம்?

மனுநீதி கண்ட சோழனின் மகன் வீதிவிடங்கன் அரசலாந் தெருவில் சென்ற போது அவனுடைய தேர்க்காலில் பட்டு இறந்ததே இளைய ஆன்கன்று!

அது யாருடைய தவறு?

கன்றின் தவறா? வீதிவிடங்கனின் தவறா?

உயர்ந்த தேர் ஒன்று மணி ஒலிகள் ஒலிக்கஅளவில்லாத தேர்த்தானைகள் புடை சூழ்ந்துவர... வருகின்றபோது... தெருவில்

வந்து நின்றது... பசுக்கன்றின் குற்றமே..'' என்று சோழனின் அமைச்சர் அழகாகச் சொல்வார்

அரவிந்தனை நம்பியது என்னுடைய தவறுதான்!

விமானங்கள் வந்து உணவுப் பொட்டலங்கள் போட்ட போது விடிவே வந்துவிட்டது போல வியந்து ஆர்ப்பரித்தது எங்கள் தவறுதான்!

ஆக. விடயங்களை விஞ்ஞான பூர்வமாகப் பார்க்க வேண்டும் என்று சொல் நான்கற்றுக் கொள்கிறேன்.

ஒப்ரிமிஸ்ரிக்காகப் பார்க்க வேண்டும் என்று சொல்லாதே! எனக்குக் கெட்ட கோபம் வரும்

ஒரு இலக்கியக் கூட்டத்திலே எழுத்தாளர் கடல் மைந்தன் சொன்னார் என்னுடைய கதா பாத்திரங்களுக்கெல்லாம் தாழ்வுச் சிக்கலாம் மன நோயாம்! அதைக் கேட்ட பிறகு நான் இந்தத் ''தாழ்வுச் சிக்கல்'' என்பதைப் பற்றி நிறைய...ய வாசித்தேன்.

சாம்பல் மேடுகளைப் பார்த்து நிலவு ஊமையாய் அழுது கொண்டிருந்த வேளைகளில் அந்த நிலவொளியிலேயே வாசித்தேன்

சூனியம் காட்டி நின்ற வீட்டினுள்ளே மெழுகுதிரி ஒன்றைக் கொளுத்தி வைத்துக் கொண்டு வாசித்தேன்.

எங்கள் கிராமத்துக்கு மின்சாரம் வந்து ஒரு பத்து ஆண்டுகள்தான் கடந்திருக்கும்.

அதற்கு முன்...

ஒரு பெற்றோல் மாக்ஸ் ஐயும், இரண்டு மூன்று லாம்புகளையும் கொழுத்தி வைத்துக் கொண்டு ஆனந்தமாய் ஓடித்திரிந்திருக்கிறோம். அப்போது அது ஒரு வேதனையாகத் தெரியவில்லை!

இப்போது மெழுகுதிரியும் கிடைக்கவில்லை... மண்ணெண்ணெய்யும் அருமை மின்கலம் கண்ணிலும் காண முடியவில்லை

ஒரு மெழுகுதிரியைக் கொழுத்தி விறாந்தையில் வைத்துக் கொண்டு எல்லாரும் சுற்றி அமர்ந்து கொள்வோம். எட்டு மணி வரைதான்!

அந்த நேரத்தில் வாசித்தேன்

''தற்புகழ்ச்சி, மேலதிகாரிகளை இகழ்வது, இன்னொரு மனிதனைத் தலைவனாக ஏற்றுத் தொண்டாற்றுவது, இலக்கியம் அல்லது கலையில் ஈடுபடுவது, வேடிக்கை செய்வது, பிறர் காரியத்தில் தலையிடுவது, போரில் இறங்குவது, பழி வாங்குவது, பகற்கனவு காண்பது, சமூக அநீதிகளை எதிர்ப்பது, பேராசைப்படுவது இவை எல்லாம தாழ்வு மனப்பான்மையின் விளைவுதான்...''

இந்த இடத்தில் நான் வாசிப்பதை நிறுத்தி எனக்குத் தெரிந்த

பலரையும் ஒவ்வொருவராக லைக்கண் வரிசையில் நிறுத்திச் ''செக்'' பண்ணினேன். கிராமத்து மக்கள் எல்லாரையும் கொண்டு போய்க் கோயிலில் அடைத்து, முகமூடிகளைக் கொண்டு வந்து, முகமூடிகள் முகங்களைப் பார்க்க, இவர்கள் அறிமுக அட்டைகளைப் பார்ப்பது போல... நானும் பார்த்துக் கொண்டு வந்தேன்.

''என்ரை பிள்ளையள் வீட்டிலை ஒரு நிமிஷம் இருந்து படிக்கிறேல்லை: பக்கத்து வீட்டுச் சுகந்தி இராப் பன்னிரண்டு மணி வரைக்கும் மேசையிலை இருந்து சப்பு சப்பெண்டு சப்பினபடி...''

தன்னுடைய மகன் படிக்காமலே இரண்டு பாடத்தில் 'டி' எடுத்தான். எட்டுப் பாடத்திலும் 'டி' எடுத்தபிள்ளை சப்பித்தான் எடுத்தது என்று பலரிடமும் சொல்லிக் கொள்வதால் தன்னுடைய மகன் அந்தச் சுகந்தியை விடக் கெட்டிக்காரன் என்று நிரூபிக்க முனையும் இந்திரராசா... இதை 'ஆ' வென்று வாய் பிளந்து கேட்கும் பரமசாமி...!

இவர்களில் யார் யாருக்குத் தாழ்வு மனப்பான்மை? சப்பினுல் என்ன, துப்பினுல் என்ன, இரண்டு டி, இரண்டு டி தான்'' என்று இவர்களுக்குச் சொல்வது யார்?

''அந்தாள் எங்கடை தலைவர்... என்ன எம். ஏ படிச்சது தான் கண்ட மிச்சம். ஒரு மண்ணும் விளங்காது... நவராத்திரிக்கு இவங்கள் போட்ட ஒரு சாதாரண நாடகத்தைச் ''சர்வதேச அந்தஸ்துள்ள நாடகம்'' எண்டு புழுகுது பாரன்! சர்வதேசமும் தெரியாது, அந்தஸ்தும் தெரியாது, நாடகமும் தெரியாது... சொல்லுற கதைக்கு ஒரு அர்த்தம் இருக்க வேண்டாமே பின்னை...?''

என்று சொல்லும் கடை மனேஜர் மகாசிவம்! மூன்று மாதமாக எங்கள் மக்கள் உணவுக்குப் பெரிய பிரச்சினைப்பட்ட போது... ஊரடங்கு நேரத்திலும் கூடத் தனது உயிரைப் பொருட்படுத்தாமல் கடையைத் திறந்து உணவு வழங்கிய நல்லமனிதர்!

ஆனுல் !

அவர் அடிக்கடி தன் மேலதிகாரியாகிய கூட்டுறவுச் சங்கத் தலைவரை இகழ்ந்து கொள்கிருர். அவருக்குத் தாழ்வு மனப்பான்மைதானு?

இன்னொரு மனிதனைத் தலைவனுக ஏற்றுத் தொண்டாற்றுவதும் தாழ்வு மனப்பான்மை என்ருல், தமிழ் இளைஞர்கள் பலருக்கும், கிழவன்தான் இன்னும் தங்கள் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தலைவன் என்று நம்புகிற அரைவாசிச் சிங்களச் சனத்துக்கும்

இலக்கியம் அல்லது கலையில் ஈடுபடுவதும் தாழ்வு மனப்

பான்மை என்றால்... எனக்கும்... அடல் மைந்தனுக்கும் ?

வேடிக்கை செய்வதும் என்றால்... அந்தக் காலத்துத் தென்னாலி இராமன் தொடக்கம் இந்தக் காலத்து மதன்ராஜ் வரைக்கும்..

மதன்ராஜ் சொல்லுவார். விசேட நிகழ்வுகளில் ஆசிர்வாதம் செய்ய முன்பு யானைகளை விடுவார்களாம். பருமனான உடலைக் கொண்ட மதன்ராஜ் யானையாகத் தன்னை உருவகித்து வேடிக்கையாய்ப் பேசுவது அடுத்தவனொருவனைப் பற்றிச் சொன்னால் அதுவும் தாழ்வு மனப்பான்மையாகப் போய்விட்டதா.

போரில் இறங்கியிருக்கிற இலங்கை இராணுவம், இந்திய இராணுவம், ஈரானியப்படை, ஈராக்படை பயணிகள் விமானத்தை சுட்டு விழுத்தும் அமெரிக்கக் கப்பல்

அப்படியானால்... இந்த உலகின் யாருக்குத்தான் தாழ்வுமனப்பான்மை இல்லை?

வெளிநாட்டுக்குப் போய் இரவு பகல் சாப்பாடு, இனம் சனம் எல்லாம் மறந்து உழைக்கிற இளைஞர்கள் எல்லாருக்கும் பணத்திலே பேராசை என்பாய்.

சமுதாயப் புரட்சிக்கு வித்திட்ட மேதைகளும் - சமூக நீதிகளை எதிர்ப்பவர் என்ற பட்டியலில் வந்து விடுவார்கள்!

சமூக சேவை என்ற பெயரில் புறப்பட்டவர்கள் எல்லாம் பிறர் காரியத்தில் தலையிடுபவர்கள்!

என்ன சொல்கிறாய்?

உன் அன்புக்
குயில்

(தொடரும்)

---

## புத்தெழில் சந்தா விபரம்

**தனிப்பிரதி 5.00**

**வருட சந்தா 55.00**

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி

**மு. திருஞானசேகரம்**
ஆசிரியர்
புத்தெழில்
அறிவாளர் வீதி,
புத்தூர்.

# தமிழ் மூதாட்டியின் வாழ்த்துக்கள்

மு. திருஞானசேகரம்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
ஒற்றுமை நீங்கில் கொண்டு வருந் தாழ்வு"

உலக மக்கள் இன்பத்துடனும், அமைதியுடனும் வாழ பொருளாதாரம், கல்வி என்பவை சிறப்புற்று அமைய வேண்டும் என்பதோடு அன்பு, சமாதானம் என்பனவும் வேண்டப்படுகின்றன. இதனால் வலியுறுத்தப்படுவது ஒற்றுமையே. உலகத் தலைவர்கள் உலகில் சமாதானம் நிலவப் பாடுபடுகின்றனர். பேச்சிலும், எழுத்திலும் இலக்கிய அறிஞர்கள் சமாதானத்தை வலியுறுத்துகின்றார்கள் உண்ண உணவு இல்லாவிடினும் உடுக்க உடையில்லாவிடினும் வாழும்வரை அமைதியுடன் வாழவே மக்கள் விரும்புகின்றார்கள். இந்நிலை இன்றைக்கு மட்டுமல்ல தமிழரைப் பொறுத்தவரையில் சங்க காலத்திலிருந்தே ஒற்றுமை வேண்டப்பட்டு வந்துள்ளது.

காளை ஒன்று கொல்லும் பாங்குடன் வருகின்றது. யாரைக் கொல்ல வருகின்றதோ என்று சொல்லமுடியாத அளவிற்கு பயங்கர ஆர்ப்பாட்டத்துடன் வருகின்ற அக்காளையை சில இளைஞர்கள் அடக்க முற்படுகின்றார்கள். அவர்களில் ஒவ்வொருவராக அக்காளையை அடக்க முற்படும்போது தோல்வியுடன் காயப்பட்டுத் திரும்பியவர்களும் மண்மீது விழுந்தவர்களும் எனப் பல தரப்பட்டு நின்றனர். இது ஏன்? அழகிற் சிறந்த பெண் ஒருத்தியை மனைவியாக அடைய ஆசை கொண்டு அதற்காக அக்காளையை அடக்க அவர்கள் முனைந்தனர். போர்க்களம் புகுந்து மார்பில் புண்பட்டு நின்றனர் சில இளைஞர். வீரம் செறிந்த போர் வீரர்களையே பெண்கள் விரும்பித் திருமணம் புரிந்தனர். இதனால் இளைஞர்கள் தம் வீரத்தை வெளிப்படுத்த வேண்டி பல போர்களிலும் சாகசங்களிலும் ஈடுபட்டனர். இது சங்க காலத்தில் காணப்பட்ட முறைமை.

போர் முரசங் கேட்டதும் கணவனை, மகனை, தந்தையை, தமையனை இப்படிப்பட்டவர்களை வீரத் திலகமிட்டுப் போருக்கு அனுப்புகின்ற பெண் வாழ்ந்தகாலம் அக்காலம். புலவர்களும்

போர் ஒழுக்கத்தை இலகுவாகப் புகழ்ந்து பாடியுள்ளனர். ஆனால் போரொழுக்கம் பேணப்பட்ட அக்காலத்திலும் இன்றைய நிலை காணப்பட்டுள்ளது.

வீர இளைஞர்கள் தம் போர்த் தினவைப் போக்கப் போர்க்களம் புகுந்து வீர விளையாட்டுக்கள் ஆடி தம் புகழ் நாட்டினர். மன்னரும் போருக்காய் படை திரட்ட நிர்ப்பந்திக்கப்பட்டனர். நாய்களும், பேய்களும் தினமும் விருந்துண்டு மகிழ மன்னர்கள் வழி செய்தனர். ஒரு நாட்டு மன்னனுக்கு அயல்நாட்டு மன்னனிடம் நட்புறவு ஏற்படுவதற்குப் பதிலாக பகைமை நிலையே வளர்ந்தது. இது தவிர்க்க முடியாததாகவும் இருந்தது. 'அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி' மன்னர்கள் தம்முள் மாறுபட்டு போர் செய்ய மக்களும் தம்முள் மாறுபட்டனர். ஒரு நாட்டின் மீது இன்னொரு நாட்டு மன்னன் படை எடுப்பதையே குறிக்கோளாகக் கொண்டு காணப்பட்டதனால் ஒற்றுமை பற்றிய எண்ணமே அங்கு ஏற்படவில்லை. ஆயினும் சில புலவர் பெருந்தகைகள் மன்னர்களிடையே சண்டை தவிர்ப்பை, ஒற்றுமையை ஏற்படுத்த முயன்றிருக்கின்றார்கள்.

தமிழ் நாடு வேந்தர் ஆட்சிக்குட்பட்டிருந்த சங்க காலத்தில் சோழநாட்டை சோழன் நெடுங்கிள்ளியும், சோழன் நலங்கிள்ளியும் இரு கூறாக்கி ஆண்டு வந்தனர் இரு மன்னரும் ஒரு குலத்தவராயினும் ஒருவர்மீது ஒருவர் பகை உணர்வு கொண்டு போருக்கான எதிர்பார்ப்புடன் இருந்தனர். அந்த நாளும் வந்தது. இருவரும் பொருதுகின்றனர். தமிழ் மன்னர் அதுவும் ஒரே குலத்தைச் சேர்ந்த மன்னர் தமக்குள் போரிடுகின்றனர் என்றால் மற்றவர் நிலை சொல்லவும் வேண்டுமோ? இதனைக் கண்ணுற்றார் அங்கொரு புலவர். அவர் வேறு யாருமல்லர். புலவர் பெருமான் கோவூர்க்கிழார். மன்னர்கள் தொடுத்திருக்கும் போரில் தமிழ் நாட்டு மக்களின் உயிர்களும் பறிக்கப்படுகின்றனவே என்று வருந்தி போர்க்களம் நோக்கிச் சென்று இரு அரசர்களையும் சமாதானஞ் செய்ய முயல்கின்றார். போரினால் வரும் கேடுகளை உணர்த்தினார். அன்று புலவர்கள் வாக்கு வேத வாக்கு. எழுதுகோல் ஏந்தியவர்கள் செங்கோல் ஏந்தியவர்களிலும் மேலானவர்களாகப் போற்றப்பட்டனர். இதனால்தான் கோவூர்க்கிழாரும் துணிவுடன் மன்னர்களை அணுகினார். இத்தன்மையால் புலவர் போர்த் தவிர்ப்பை விரும்பினார் என அறிய முடிகின்றது.

தமிழ் மூதாட்டி ஔவையார் எல்லா மக்களாலும், மன்னராலும் மதிக்கப்பட்டவர். கூழுக்குப் பாடுகின்றவர் என்றாலும் ஔவைக்கிழவி தங்கிழவி எனப் போற்றப்பட்டவர். முருகப் பெருமானிடம் சுட்ட பழம் பெற்றவர் அல்லவா? சிவனுக்கும்

முருகனுக்கும் ஏற்பட்ட கோபத்தைத் தணிக்க சந்து பேசியவர். இவர் ஒருநாள் காண்டற்கரிய காட்சியைக் கண்டு குதூகலித்தார். விநாயகப் பெருமானின் பேரருள் பெற்ற ஔவை அப்பேரருளிலும் கிடைத்தற்கரிய பேறு பெற்றதாக எண்ணி மகிழ்கின்றார் அது என்ன?

கடைச் சங்க காலத்தில் தமிழ் நாட்டை ஆட்சி புரிந்த மூவேந்தர்கள் பாண்டியன், கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெரு வழுதி சோழன். இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி சேரமான் வெண்கோ ஆகியோர் ஆட்சி புரிந்து வந்தனர். மூவேந்தர்கள் தமக்குள் முரண்பட்டுப் போர் புரிந்த வரலாறுதான் உண்டு இல்லையேல் ஒருவர்மீது ஒருவர் பகை கொண்டு உறவு பாராட்டாத நிலையுண்டு. இதனையே கண்டும் கேட்டும் வந்த ஔவையாருக்கு தன்னையே தன்னால் நம்பமுடியாத அளவுக்கு முன் கூறப்பட்ட உக்கிரப் பெருவழுதியும், பெருநற்கிள்ளியும், சேரமான் வெண்கோவும் நெருங்கிய நட்புப் பூண்டு சிறிதேனும் பகை உணர்வு அற்றவர்களாக ஒன்றுபட்டு ஒற்றுமையாய் அளவளாவி மகிழ்ந்திருந்த காட்சி நம் மூதாட்டியின் கண்ணில் பட்டு விட்டது. இது காணக் கிடைக்காத காட்சி. அது ஔவையார் கண்ணில் பட்டதும் மகிழ்ச்சி பொங்கியது உள்ளத்தில். அவர் சும்மா இருப்பாரா? பாடல் பிறந்தது மூவேந்தர்களையும் வாழ்த்தி மழை வறண்டாலும் உம் வாழ்நாள் நீண்டதாகட்டும் என்று வாழ்த்துகின்றார்.

இதிலிருந்து ஔவையாரின் உள்ளம் ஒற்றுமைக்காக ஏங்கியிருக்கின்றார் என்பதனைக் காட்டுகின்றது உண்மையில் ஒற்றுமையின் வலிமை, பெருமையினை ஔவையார் பெரிதும் உணர்ந்தவர் 'ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்' அன்று பிறநாட்டவரின் ஆதிக்கம் தலையெடுக்காத காலத்தில் தமிழ் வேந்தர்களாம் மூவேந்தர்கள் ஒன்றுபட்டிருக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருக்கின்றது என்றார் இன்று நம்நிலை எப்படியமைய வேண்டும்? மூவேந்தர் ஒற்றுமையுடன் இருந்த காட்சி தமிழ மூதாட்டிக்கு மகிழ்வைக் கொடுத்ததென்றார். தமிழன்னைக்கு எத்தனை பூரிப்பைக் கொடுத்திருக்கும். அந்த ஔவையின் மகிழ்ச்சியைப் பின்வரும் பாடல் உணர்த்துகின்றது.

''முத்தி புரையக் காண்டக விருந்த
கொற்ற வெண்குடை கொடித்தேர் வேந்தீர்
யானறி யாளவையோ விதுவே வானத்து
வயங்கித் தோன்றும் மீனினுமிம்மென
இயங்கு மாமழை யுறையினும்
உயர்ந்து மேந்தோன்றிப் பொலிக நுந்நாளே''

# ஏன் மீனே?

ஆரம்பம் முதற் கொண்டே
ஆழியில் வாழும் மீனே
அழகு நிறைந்த எங்கள்
அகிலத்தைத் தெரிகிறதா?

விண்ணைத் தொடுகின்ற
மலை மேகம் எழிற்காட்சி
மண்ணைத் தழுவும் பெரு
வற்றாத ஜீலநதி
கண்ணைக் கவரும் கிளிப்
பசுமை தருமாட்சி
இன்னும் பல புதுமை
இருக்கின்ற இயற்காட்சி

வானைத்து வனப்பூட்டும்
மாலை மறைலயங்கள்
கானம் இசைத் திந்த
வானம் தொடும் பறவை
மீனே உனைப் பழிக்கும்
மாதரெழில் மை விழிகள்
காண வியப்பூட்டக்
கழுகு நான் தூக்கி வந்தால்

உலகோர் கழுகு எனைப்
பொல்லாத தென்பார்கள்
அழுகின்றேன் நீயும் எனை
அவ்வாறு எண்ணி விட்டாய்
புரியாதென் நல் எண்ணம்
புரிந்திருந்தால் ஏன் மீனே
உயிரைத் துறந்து விட்டாய்
உலகின் எழில் காணுமுன்னர்?

— நெடுந்தீவு லக்ஸ்மன்

*தாகூரின் சிந்தனைகள்*

# மண்ணின் மணம்

கிழக்கு வானில் முகிழ்ந்திருக்கும் நிலவு இன்னும் வானத்தின் உச்சியில் அரைவாசியாகிப் போயிருக்கும்! மெல்லொளியும் மெல்லிருளும் கலந்திருக்கும் சோபனப் பொழுதில்; முற்றத்தின் இருபுறமும் கொத்துக் கொத்தாய் மொட்டவிழும் மல்லிகைகூட என்னமாய் மணம் வீசும்! பக்கத்தில் இரதைவாழை இலைகள் ஒன்றோடொன்று உரசி, தென்றலின் ஸ்பரிசத்தை உணர்த்துகிற போதெல்லாம் வேலியோர மாம்பூக்கள் மனசை இனிக்க வைக்கும்!

இந்த இனிமைக்காகவே காலம் முழுவதும் இந்த வீட்டின் முகப்புக் படிகளில் உட்கார்ந்து விடலாம்போல ஒரு ஆதங்கம் உருவாகும்! திறந்திருக்கும் ஒற்றைக் கதவு வழியாக உள்ளிருந்து வரும் மின்னொளி முற்றத்தில், விரிகோடிட்டு 'கேற்' இனூடாக றோட்டில் விழுகையில் குறுக்கறுத்துச் செல்லும் சைக்கிள்கள் 'பளிச்பளிச்' என மின்னலடித்துவிட்டுப் போகும்வேகம் வீதிக்கு அழகூட்டும்! ஆரவாரமேதுமின்றி திடீரென்று தூறலடிக்கும் மழைத்துளிகள் மண்ணை மட்டும் மணக்கச் செய்துவிட்டு, அவசரமாய் மறைந்து கொண்டு வேடிக்கை காட்டும்!

தூரத்தில் மெல்லிய உறுமலுடன் வேகமாய் நகரும் 'கொண்டா'க்கள் கர்ண கடூரமான ஓசையுடன் இந்த ஒளிக் கோடுகளைத் தாண்டும்போது குப்பென்று அடிக்கும் பெற்றோல் நெடி கடந்துபோன நான்கு வருடகால இரவுகளை ஞாபகப் படுத்தும்! சட்டென்று உணர்வுகள் கலங்கி, சில கணங்களை இனம்புரியாத ஏக்கம் குடிகொள்ளும்!

வானத்தின் உச்சியைப் பார்த்தால் நம்பிக்கை துளிர்விடும் - இன்று நிலவு அரைவாசி தான் - பாதை மட்டும் மாறியிராது!

திடுமென்று இருண்ட வண்டியொன்று 'விர்ரென்று' கடக்க, ரியூசன் மாணவர்கள் வெளிச்சத்தில் ஒரு தடவை அடையாள அட்டைகளை இறுகப் பற்றிக் கொள்வர்! டீசல் மணம் மறைய முதல் மீண்டும் சிரிப்பும் கதையுமாய் - சைக்கிள்கள் அசையும்!

வீட்டு ஹோலில் காற்றை விசிக் கொண்டிருந்த மின்விசிறியை பட்டப்பகலில் பிடுங்கி எடுத்துக்கொண்டு ஓடிய கள்வன் வீதியில் விழும் இந்த வெளிச்சக் ஹும், வீட்டுச் சண்டைக்கு வேலியையே எரித்துவிட்ட வெறிகாரனும், மீண்டும் சுதந்திரமாய்,

**திருமதி**
**சந்திரா இரவீந்திரன்**

கோடுகளைத் தாண்டுகையில் மனம் ஊமையாய் வெதும்பும்!

வெள்ளைச் சேலையணிந்த, வெள்ளைத்தை இளம் பெண் ஞெருத்தி. அழும் குழந்தையைத் தூக்கத் திராணியற்று, கைப்பிடியில் இழுத்துக்கொண்டு அவசரமாய் கடக்கையில் 'யூலை 83' மனதில் முள்ளாய் நெருடும்! அயல் வீட்டு டேவிட் மாமா மரக்காலுடன் சைக்கிள் ஓட்டிவந்து களைப்போடு இறங்குகையில் வீட்டுக்குள்ளிருந்து வரும் பிஞ்சுக்குரல்களின் ஆரவாரம் இறந்துபோன அவர்களின் தாயையும 'அக்டோபர் 87' ஐயும் சோகமாய் தட்டிக் காட்டும்! சிதறிக் கிடந்த மனித உடல்களும், கருகிச் சரிந்து கிடந்த வீடுகளும், அறுந்து தொங்கியிருந்த தந்திக் கம்பிகளும் மழையின் சகதியில் புதைந்து கிடந்த மரங்களும், இரத்தத்தை உறிஞ்சக் குடித்து விசரில் அலைந்த நாய்களும, நரமபை அறுத்த மாபெச நற்ற ம '83யூலையை' தோற்கடித்த திமிரோடு தொடர்ந்து வந்து மனதைச் குடையும்! வடு ல் காயமாய் ரணம் கொதிப்பெடுக்க ஆரம்பிக்கும்!

தூரத்தில் எங்கோ துப்பாக்கி வேட்டுக்கள் சட்டென்று நினைவுகளைக் கலைக்க, உள்ளிருக்கும் மணிக்கூட்டில் வழமைபோல் கம்பிகள் தாவும் - நேரம் ஒன்பது மணிக்கு மேலாகிவிடும்!

சப்பாத்தி நெய்யின் நெடி இடைப்டையே மல்லிகை மணத்தை மேவ, உள்ளுக்குள் ஏதோ வயிற்றைப் புரட்டும்! தெருநாய்கள் சொல்லி வைத்ததுபோல் 'கோரஸ்' ஆய் குரைக்கத் தொடங்கும்! 'வான்' ஒன்று வேகமாய் ..... மிக வேகமாய் கடந்து மறைய முதல், தொடர்ந்து சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் அவசரமாய் காற்றைக் கிழிக்கும்!

எதிர்வீட்டு ஜன்னல்கள் சைகை காட்டுவதுபோல் ஜாக்கிரதையான ஓசையுடன் மெதுவாக மூடப்பட, எதிரில் இருள் கவியும்!

''உள்ளுக்கு வா பிள்ளை'' அம்மாவின் குரலோடு, வீட்டுக்குள்ளிலிருந்து வரும் மின் வெளிச்சத்தின் விரிகோடுகள் ஆற்றாமையுடன் மறையும்!

எங்கும் சோக இருள் படர, துரிதகதியில் வீதி மௌனித்துவிடும்! பேரமைதி! நாய்களின் குரைப்பொலிகளையும் மீறி தூரத்தில் துப்பாக்கி வேட்டுக்கள்! மீண்டும் அமைதி.

எங்கோ ஒருவர் நேரத்தைப் பார்க்க மறந்திருப்பார்! அல்லது மரணத்தைத் தழுவ விரும்பியிருப்பார்!

எழுந்து நின்று மேலே பார்த்தால் வானத்தின் உச்சியிலிருந்து நிலவு கொஞ்சம் மேற்கில் நழுவி இருக்கும்!

பின், காலையொன்று சலனமின்றி அசாதாரணமாய் பிறக்கும் தொடர்ந்து மீண்டுமொரு மாலைவரும்! நிலவுகூடத் தேய்ந்து பின்னர் வளரும்!

ஆனல் இந்த மண்மட்டும் மாருமலா இருக்கும்!

# சென்மதி நிலுவை

எம். லோகலிங்கம்

இன்று உலக நாடுகளில் சில அபிவிருத்தி அடைந்து காணப்படுகின்றன. பல நாடுகள் குறைவிருத்தி நிலையில் உள்ளன எவ்வாறாயினும் நாடுகள் எதுவும் தன்னிறைவு அடைய முடியாமலேயே காணப்படுகின்றன வளங்களின் கொடையானது நாட்டுக்கு நாடு வேறுபட்டிருப்பதே காரணமாகும். இதனால் நாடுகள் தம்மிடம் மிகையான பொருட்களை ஏற்றுமதி செய்தும் பற்றாக் குறையான பொருட்களை இறக்குமதி செய்யவும் முற்பட்டன. எனவே நாடுகளிடையே பன்னாட்டு வர்த்தகம் முக்கியத்துவம் பெற்றது. இந்த முக்கியத்துவத்தின் வெளிப்பாடாகவே சென்மதி நிலுவை என்பதும் காணப்படுகின்றது.

ஒரு நாட்டுக்கும் ஏனைய நாடுகளிற்கும் இடையில் குறிக்கப்பட்ட ஒரு கால அளவினுள் சட்டரீதியாக இடம் பெறுகின்ற கொடுப்பனவுகள் பெறுகைகளை ஒழுங்கு முறையாக சித்தரித்துக் காட்டும் பட்டியலே சென்மதி நிலுவை எனக் குறிப்பிடலாம் இச் சென்மதி நிலுவைப் பட்டியலானது இரட்டைப்பதிவு முறையாகப் பதிவு செய்யப்படுவதனால் அது சமனாகவே இருக்கும். இச்சமனாக்கல் வெறுமனே இரட்டைப்பதிவு முறையினால் எழுந்ததே தவிர பொருளியல் கருத்தின்படி சென்மதி நிலுவையின் சமநிலைபற்றி பேசிக்கொள்வது சிக்கலானதாகும் ஏனெனில் நாடுகளின் சென்மதி நிலுவையானது நடைமுறையில் பற்றாக்குறையாகவோ அல்லது மிகையாகவோதான் காணப்படுகின்றது. சென்மதி நிலுவையின் மிகைகள், குறைகள் பற்றி அறிவதற்கு முன் சென்மதி நிலுவைப் பட்டியலில் உள்ளடங்கும் விடயங்கள் பற்றி அறிவது பொருத்தமுடையதாகும்.

சென்மதி நிலுவை அட்டவணையானது நடைமுறைக் கணக்கு, மூலதனக் கணக்கு என இரு வகைப்படுத்தலாம் நடைமுறைக் கணக்கினுள் பொருட்கணக்கு, சேவைகள் கணக்கு, மாற்றுக் கணக்கு என மூன்று பிரிவுகள் இடம்பெறும். மூலதனக் கணக்கினுள் நாணயமல்லாத் துறைக்கணக்கு, நாணயத்துறைக் கணக்கு என இரு பிரிவுகள் இடம்பெறும். பொருட் கணக்கானது கட்புலனாகும் ஏற்றுமதிகளையும் கட்புலனாகும் இறக்குமதிகளையும் உள்ளடக்குவதாக இருக்கும் இக்கட்புலனாகும் ஏற்றுமதிக்கும், கட்புலனாகும் இறக்குமதிக்கும் இடையிலான மிகைகள்

அல்லது பற்றுக்குறைகள் வர்த்தக நிலுவை எனப்படும். சேவைகள் கணக்கினுள் கப்பல்கூலி, வணிகப் பொருட் காப்புறுதி, பயணக் கட்டணங்கள், உல்லாசப் பயணம், முதலீட்டு வருமானம், துறைமுக செலவுகள், அரசின் செலவீனங்கள் போன்றன இடம்பெற்றுக் கொள்ளும். இத்தகைய நடவடிக்கையின் பெறுகைகளுக்கும் கொடுப்பனவுகளுக்கும் இடையிலான வேறுபாடு சேவைகள் நிலுவை எனப்படும்.

மாற்றுக் கணக்கினுள் பெரும்பாலும் ஒரு பக்க சார்ந்த நடவடிக்கைகள் இடம்பெறும். இத்தகைய மாற்றுக்கள் தனியார் மாற்றுக்களாகவோ அலுவல் சார் மாற்றுக்களாகவோ இருக்கலாம். தனியார் மாற்றுக்களுக்கு உதாரணமாக வெளிநாடுகளில் வதியும் இலங்கையர்களால் அனுப்பப்படுகின்ற பணத்தினைக் குறிப்பிடலாம். அலுவல் சார்ந்த மாற்றுக்களாக இலங்கை அரசாங்கம் வெளிநாட்டு அரசாங்கம் அல்லது சர்வதேச ஏஜென்சிகளிடம் இருந்து பெற்றுக்கொள்ளுகின்ற செயற்திட்ட, பண்ட நன்கொடைகளை கருதும். தனியார் மாற்றுக்களினதும், அலுவல்சார் மாற்றுக்களினதும் தேறிய பெறுமதியுடன் சேவைகள் நிலுவை, பொருட்களுக்கு நிலுவை என்பவற்றைச் சேர்த்துக் கொண்ட பெறுமதியே நடைமுறைக்கணக்கு நிலுவையாக இருக்கும்.

நாணயமல்லா மூலதனக் கணக்கினுள்ளே நேரடி முதலீடுகள் நீண்டகால குறுங்கால கடன்கள் பதிவு செய்யப்படும். இத்தகைய மூலதன அசைவுகள் தனியாரினதும் அரசினதுமாக இருக்கலாம். நாணயத்துறைக்கணக்கான சர்வதேச ஒதுக்குகள் கணக்கு என்பதற்குள் சர்வதேச நாணய நிதியத்துடனான நிலைகள் வெளிநாட்டு ஒதுக்குகளிலான மாற்றங்கள் பிழைகள் தவிர்ப்புக்கள் என்பவை பதிவு செய்யப்படும். இச் சர்வதேச ஒதுக்கு நாட்டின் சர்வதேச திரவத் தன்மையை வெளிக்காட்டுவதாக இருக்கும். கோட்பாட்டு ரீதியில் சென்மதி நிலுவை அட்டவணையில் இடம்பெறும் கொடுக்கல் வாங்கல்களை தன்னிச்சையான கொடுக்கல் வாங்கல்கள், ஏற்பாட்டுக் கொடுக்கல் வாங்கல்கள் என இருவகைப்படுத்தலாம். தன்னிச்சையான கொடுக்கல் வாங்கல்கள் என்பதன் கருத்து பொருளாதாரமொன்றினுள்ளே வெளிச் செல்வாக்கு எதுவுமின்றி தன்னிச்சையாகவே இடம்பெறும் கொடுக்கல் வாங்கல்களைக் கருதும். உதாரணமாக ஏற்றுமதி, இறக்குமதியைக் குறிப்பிடலாம். இத்தன்னிச்சையான கொடுக்கல் வாங்கல்களினால் இடம்பெறும் பற்றுக்குறையினை நிவர்த்திப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை ஏற்பாட்டுக் கொடுக்கல் வாங்கல்கள் எனக் கருதலாம் எனவே தன்னிச்சையான கொடுக்கல்

வாங்கல்களின் விளைவாக ஏற்படும் பற்றுக் குறையினையே சென்மதி நிலுவையின் பற்றுக்குறை எனவோ அல்லது தன்னிச்சையான கொடுக்கல் வாங்கல்களின் விளைவாக ஏற்படும் மிகையினை சென்மதி நிலுவையின் மிகை எனவும் கருதிக் கொள்ளமுடியும் என பொருளியலாளர்கள் கருதுவர். எனினும் சென்மதி நிலுவையிலான மிகைகள் அல்லது பற்றுக்குறையினை விளக்குவதற்கு "அடிப்படை நிலுவை" என்பதனை இலகுவாகக் கணிப்பீடு செய்ய முடியும்.

அடிப்படை நிலுவை என்பதன் கருத்து நடைமுறைக் கணக்கு நிலுவையுடன் தேறிய நீண்டகால மூலதன அசைவுகளை சேர்த்துக் கொண்ட பெறுமதி என்பதாகும். இங்கு தேறிய நீண்டகால மூலதன அசைவுகள் என்பது பெரும்பாலும் நேரடி முதலீடு அரசினதும் தனியாரினதும் நீண்டகால மூலதன அசைவுகள் என்பனவாக இருக்கும். பொதுவாக அடிப்படை நிலுவையில் ஏற்படும் குறை அல்லது மிகை சென்மதி நிலுவையிலான மிகை அல்லது குறை எனலாம்.

சென்மதி நிலுவையிலான போக்கினை அறிந்து கொள்வதற்கு திரண்ட நிலுவை என்ற காட்டியினையும் தயாரித்துக் கொள்வர். இதன்படி நடைமுறைக் கணக்கு நிலுவையுடன் நாணயமல்லாத் துறைக் கணக்கு நிதியும் நாணயத்துறையினுள் இடம்பெறும் சிறப்பு எடுப்பனவுகளின் பெறுமதி பிழைகள் தவிர்ப்புக்கள் பெறுமதிகளின் சீராக்கம் என்பவை சேர்க்கப்பட்ட பெறுமதியே திரண்ட நிலுவையாகும். இத்திரண்ட நிலுவையின் பெறுமதியானது நாணய அசைவுகளின் பெறுமதியினை வெளிப்படுத்தும்.

## மாணவர் பகுதி

இந்த இதழில்
மாணவர்களின் நன்மை கருதி
மாணவர் பகுதி
எனும் பகுதியை இணைத்துள்ளோம்
என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.
படைப்புக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

## பல்துறை வேந்தர்

# பேராசிரியர் வித்தி

கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்

உலகிற் தோன்றியவர்களுள் ஒரு சிலரே தமது அறிவாலும் ஆற்றலாலும் நற்பண்புகளினாலும் ஏனையோர் மனதைக் கவரும் உத்தம புருஷர்களாக விளங்குகின்றனர். இவ்வகையில் அவர்கள் சாதனையாளர் எனவும் போற்றப்படுவர். ஈழத்திற் தோன்றிய பேரறிஞர் வரிசையில் சாதனையாளராகவும் ஏனையோரின் அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரராகவும் விளங்கியவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் இந்துப் பெருமகனும் தமிழ்ப் பேராசிரியருமாகிய அமரர் பேராசிரியர், கலாநிதி சி. வித்தியானந்தன் அவர்களாவர்.

தமிழியல் ஆய்விலும் மற்றும் கலைத்துறையிலும் அவரது திறமைகளும் பணிகளும் வரலாற்றுப் பெருமைமிக்க முத்திரைகளாகப் பதிந்துள்ளன. இலங்கைப் பல்கலைக்கழகம் தொடங்கிய காலமாகிய 1942ம் ஆண்டிலேயே இவரும் தமது பல்கலைக்கழகக் கல்வியைப் பெறும் வாய்ப்புப் பெற்றார். சுவாமி விபுலானந்தர், பேராசிரியர் கணபதிப்பிள்ளை, பேராசிரியர் செல்வநாயகம் போன்ற அறிஞர்களைக் கொண்ட குருபாரம்பரியத்தில் உருவாகியவர் பேராசிரியர் வித்தியானந்தன் பேராசிரியரின் வளர்ச்சி சிற பாடப் பல்கலைக்கழக வளர்ச்சியோடு இணைந்து சென்றது. பல்கலைக்கழகத்தில் முப்பது ஆண்டுகளுக்கு மேல் ஆசிரியராகவும், பத்து ஆண்டுகளுக்கு மேல் துணைவேந்தராகவும் பணியாற்றித் தமிழ் மக்களின் மதிப்புக்குரியவரானார். இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகிய உயர் நிறுவனங்களில் இவர் சிறந்த விரிவுரையாளராகவும், ஆற்றல் மிக்க பேராசிரியராகவும், துணைவேந்தராகவும் பணிபுரிந்து பெருமையுடன் திகழ்ந்தவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தராக விளங்கும் பேறு இவருக்குக் கிட்டியது. இக்காலப் பகுதியில் இவரது பல்துறை சார்ந்த ஆளுமை நன்கு வெளிப்படலாயிற்று. இவரது ஆற்றல்மிக்க வழிகாட்டலினால் எண்ணற்றோர் நற்பேறு பெற்றனர். இவரிடம் கல்வி பயிலும் வாய்ப்புப் பெற்ற மாணவர் பரம்பரை பல்துறைகளில் சிறந்த ஆற்றல் மிக்கவர்களாய் இன்று விளங்குவதே இவரது திறமைக்கு உரைகல்லாகும்.

தமிழியலிலும், தமிழ் நாடகத்துறையிலும் அவர் ஈட்டிய சாதனைகள் பழைமைக்கும் புதுமைக்கும் பாலம் அமைக்கும் முயற்சிகளாக அமைந்தன. உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தில் இலங்கைக் கிளையின் தலைவராயிருந்து 1974ஆம் ஆண்டு பல் வேறு இடர்களுக்கு மத்தியில் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டைச் சிறப்பாக நடத்திய சாதனையாளர் பேராசிரியர் வித்தியானந்தன் தமிழகத்திற்கு அடுத்த நிலையில் தமிழாராய்ச்சி மகாநாடு நடத்தும் தகுதி யாழ்ப்பாணத்திற்கே உரியது என்ப தைத் தமது செயற்திறனால் நிரூபித்தவர் இதன் பயனாய் இவ ரது புலமையும் புகழும் வெளிநாடுகளிலும் நன்கு அறியப்பட் டன.

பல்கலைக்கழகத்தில் ஆய்வாளர்களை நெறிப்படுத்துவதிலும் ஊக்குவிப்பதிலும் மற்றும் மாணவர்களை நெறிப்படுத்துவதிலும் இவர் தன்னிகரற்று விளங்கினார் இவரது வழிகாட்டலில் ஆய்வு செய்து உயர் பட்டங்களைப் பெற்றவர்கள் அநேகர்.

தமிழியல் மாத்திரமன்றி இந்துப் பண்பாட்டுத்துறை சார்ந்த விடயங்களிலும் பேராசிரியர் பெரும் ஈடுபாடு உடைய வர். பல்வேறு சமயங்களாகிய இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ சமயங்களைச் சார்ந்த மாணவர்கள் பயிலுகின்ற உயர்கல்வி நிறு வனம் ஒன்றிலே, சமய சமரசப் போக்கினைக் கடைப்பிடித்து அதன்மூலம் மனித நேயத்திற்கு முதன்மையளித்தவர் பேராசிரி யர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆண்டுதோறும் லீலா வதி இராமநாதன் பெருமாட்டி நினைவுப் பேருரை நிகழ்வதுண்டு 1985ஆம் ஆண்டு நினைவுப் பேருரை நிகழ்த்திய பெருமை பேரா சிரியரைச் சார்ந்தது ''இந்து கலாச்சாரம், சைவசமயம், சைவ சித்தாந்தம், திராவிடப் பண்பாடு என்பவை பற்றிய கல்வியினை யும் ஆழமான ஆராய்ச்சிகளையும் ஊக்குவிக்கும் பணிகள்'' என்ற தலைப்பில் அவர் நிகழ்த்திய பேருரை இந்துப் பண்பாட்டுத் துறை வளர்ச்சியில் அவர் கொண்டிருந்த ஈடுபாட்டுக்குச் சிறந்த சான்றாகும் ஈழத்தில் தோன்றிய பெரியோர்கள் இந்துப் பண் பாட்டு வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பையும் பணிகளையும் பேரா சிரியர் தெளிவாக இப்பேருரையில் எடுத்துக் காட்டி, அப்பணி களைத் தொடர்ந்து நாம் மேற்கொள்ள வேண்டிய பொறுப்பை யும் கோடிட்டுக் காட்டியமை இங்கு குறிப்பிடத்தக்கது தமிழி யல், சைவசமயம், சைவசித்தாந்தம், இந்து கலாச்சாரம், கோவில்களுடன் தொடர்புடைய நுண்கலைகள் என்பவை பற்றிய உயர்கல்வியையும், ஆராய்ச்சிகளையும் மேம்படுத்தும் பொறுப்பும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குச் சிறப்பாக உரியதாகும் என்

பதை பேராசிரியர் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார். இராமநாதன் அவர்கள் நிறுவிய கல்லூரி பல்கலைக்கழகமாக வளர்ச்சி பெற்றிருப்பதைக் குறிப்பிட்டு இந்திய வரலாறு, தமிழக வரலாறு, தமிழ்க்கல்வி, இந்து கலாச்சாரம், சமஸ்கிருதம் ஆகிய துறைகள் சார்ந்த கல்வியை இங்கு விருத்தி செய்வதன் மூலம் இராமநாதனின் கனவுகளை நனவாக்குவது நமது கடமையாகும் என்பதையும் இக்கடமையை நிறைவேற்றுவதற்குச் சமுதாயத்தின் ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைக்கவேண்டும் என்பதையும் பேராசிரியர் இப்பேருரையிற் சுட்டிக்காட்டியிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்,

பேராசிரியர் யாவற்றுக்கும் மேலாக மூத்தோர், இளையோர், வலியோர், மெலியோர் என்று பாராது அனைவரிடத்திலும் அன்பும், பரிவும் பாராட்டிய பெருமைக்குரியவர், எவருடைய கஷ்டத்திலும் உதவ வேண்டும் என்ற மனப்பான்மை கொண்டவர். இத்தகைய பண்புகளினால் அவர் உத்தம புருஷனாக விளங்கினார். பல்துறைகளில் பேராசிரியர் மேம்பட்டு விளங்கிய போதும் பட்டம், பதவி போன்றவற்றால் அவர் ஆட்கொள்ளப்படாமல் மிகவும் எளிமையாகவே விளங்கினார். ஆசிரியருக்குரிய பண்புகளும் அவரிடம் மிகுந்திருந்தன.

பேராசிரியர் அவர்கள் தமது வாழ்வைப் பல்கலைக்கழக வளர்ச்சியிலும் சமுதாய வளர்ச்சியிலும் இணைத்துக் கொண்டவர். அறிவியல், கலை, பண்பாடு, சமூகம் பற்றிய பல்துறைகளிலும் சாதனைபுரிந்த பேராசிரியர் இந்நாட்டின் சகல இன மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் உள்ளங்களிலே நீங்காத இடத்தைப் பிடித்துக் கொண்டவராவர். அன்பு நெஞ்சங்கொண்ட அனைவராலும் 'எங்கள் வித்தி' என அன்புரிமையுடன் அழைக்கப்பட்ட பெருமகனாக விளங்கினார். பேராசிரியர் ஆற்றிய சேவைகள் பல்துறை சார்ந்தவை. அவை இந்த மண்ணில் என்றும் நிலைத்து நிற்பன. அனைவராலும் நினைவு கூரப்படும் சிறப்பு வாய்ந்தவை. பல்துறை சாதனையாளரான பேராசிரியர் அமரர் சு. வித்தியானந்தன் தமிழ் நெஞ்சங்களில் என்றும் நினைவு கூரப்படுவார் என்பதில் ஐயமில்லை.


புத்தெழில் கிடைக்குமிடம்

**விநாயகர் ஸ்ரோர்ஸ்**

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

# தமிழர் திருமண முறைகள்

பேராசிரியர் சரவண ஆறுமுக முதலியார்,

பிறநாடுகள் எல்லாம் அறியாமை இருளில் உழன்று கொண்டிருந்தபொழுது, இருநில உலகின் பெருநிலப் பரப்பில் "கல்தோன்றி மண் தோன்றாத, வரலாற்று ஆராய்ச்சிக்கு மிகமிக முற்பட்ட பழங்காலந் தொட்டே கல்வி, கலை, நாகரிகம், பண்பாடு முதலியவற்றில் தமிழ் மக்கள் மிக மேம்பாடெய்தியிருந்தனர் என்பது வரலாற்றறிஞர் கண்டறிந்த உண்மையாகும். அகம், புறம் என இருகூறாக இயங்கும் தம் வாழ்க்கை முறைகளில் மிகவுயர்ந்த கொள்கைகளையும், குறிக்கோள்களையும் கொண்டுவிளங்கினர் தமிழ்மக்கள். அவ்விரு கூறுகளுள், முதன் முதல் வாழ்க்கைத் துணைவர்கள் ஒருவரை ஒருவர் கனவிற்கண்டு ஒன்றுபட்ட களவியல், அதன் வழித்தாகிய கற்பியல், அதில்ஆற்றுப்படுத்தும் மணவியல், மணவாழ்க்கையின் நிலக்களமாகிய இல்லறத்தின் நல்லறம் ஆகிய இன்னோரன்ன வாழ்க்கை முறைகளைச் சங்கத்துச் சான்றோர் இலக்கியங்களிலும், அவற்றிற்கு முற்பட்டு ஒரே வழிக் காணனுறும் பாடல்களிலும், அவற்றின் வழிவந்த ஒல்காப் புலமைத் தொல்காப்பியனாரின் பொருளதிகாரப் பகுதிகளிலும் நாம் விளக்கமாக அறியலாம். திருமண முறைகள் இலைமறைகாய் போல் இவற்றுள் அமைந்திருக்குமாற்றைத் தொல்காப்பியர் காலமுதல், இடைக்காலம் (12ம் நூற்றாண்டு) முடிய ஒருவாறு காண்போம்.

கணவனும் மனைவியும் வாழத் தொடங்கும் நிலைக்குத் திருமணம் என்ற பெயர் வைத்தமை எண்ணி மகிழ்தற்குரியதாகும். திருவென்னுஞ் சொல் அழகு, செல்வம், செம்மை, சிறப்பு முதலிய பொருள் பொருந்திய சொல்லாகும். சுருங்கக்கூறின், "கண்டோரால் விரும்பப் பெறும் தன்மை விளங்குமிடமெல்லாம்" திருவும் பொலிகின்றதென்று சொல்லலாம். மணமென்னுஞ் சொல் நறுநாற்றத்தைக் குறிக்கும் பெரும்பாலும் இயற்கையில் மணங்கமழ்வது மலர்களேயாகும். அம்மலரும், வைநுனையாய் - சிற்றரும்பாய், வியாய் இருக்குங்கால் மணஞ் சிறப்பதில்லை; மலரும் நிலையில் - பெரும் போதாய் நிற்கும்போதுதான் மணமிகுந்து விளங்குகின்றது. காய்த்துக் கனிந்து விளங்க மணமிகும் போதுப் பருவமே சிறந்ததாகும். அங்ஙனமே மக்கள் வாழ்விலும் குழவியாய், இளைஞனாய், நரைமூதாளனாய் இருக்கும்நிலை பெருஞ் சிறப்

புடைத்தன்று. மணந்து மகப்பெற்று நாட்டிற்கும் நல்லன புரி யச் சிறந்து நிற்பது மணப் பருவமேயாகும். இப்பருவத்தில், மலரின்கண் மணம் வெளிப்படுவதுபோல் மணமக்களின் மனத்த கத்து அன்பு மலரும். இச்சிறப்புணர்ந்தே தமிழ்மக்கள், இந் நிகழ்ச்சி (மணவினை)யை மணமென மணமுவப்பக் கூறினர். மண மென்பது மணமக்களின் மனமொத்ததாகும் முழுவதும் வாழ்வு மணம் பெற்றுத் திகழ்வதற்கு ஏதுவாக இந்நிகழ்ச்சியை மணம் என்று பெயரிட்டமை ஏற்புடைத்தாகும்.

தமிழ்மக்கள் தம் வாழ்க்கையை, அகம், புறம் எனப்பகுத் துள்ளனர். இது 'தமிழின் துறைவாய் நுழைந்தனையோ' என்ற திருக்கோவையாரடிக்குப் பேராசிரியர், ''தமிழின் துறைகளாவன ஈண்டு அகமும் புறமும்'' என உரைத்தமையாலும் அறியலாம். அப்பண்பட்ட நிலையில், அப்பகுதிகளுக்குரிய இலக்கணத்தையும் வரையறுத்து வாழ்ந்து வந்த பெருமை தமிழ்மக்கட்கே உரிய தனிச் சிறப்பாகும். ஏனைய மொழியினர் அறம், பொருள், இன் பம், வீடெனப் பகுத்ததெல்லாம் இவ்விரண்டனுள் அடங்கி நிற் கின்றன. உலக நிகழ்ச்சிகளையெல்லாம் உன்னிப் பார்க்கும்போது அவை காதலும் போருமாக — ஈரச்சுவையும் வீரச்சுவையுமாக — நிற்கக் காண்கின்றோம். இதனையே நம்மனோரின் அகம், புறம் என்ற பாகுபாடு உணர்த்தி நிற்றல் ஊன்றி நோக்குவார்க்குப் புலனாகும். வீரத்திற்கும் அன்பே அடிப்படையாக அமைந்துள் ளது. எனவே அகம் புறமென அமைந்து கிடக்கும் தமிழினத்தின் வாழ்வு அன்பை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளமை அறிந்தின் புறத்தக்கதாகும்.

இனி, தமிழர் தம் வாழ்க்கைப் பிரிவிற்கு அகம், புறம் எனப் பெயரிட்டதன் காரணத்தைக் காண்போம். அன்பு நெறி யில் முதிர்ந்த ஒரு தலைவனும் தலைவியும் கூடி இன்புற்று வாழும் வாழ்வெல்லாம் அகம் எனப்பட்டது. இதனை, ''ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம் அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவர்க்கொருவர் தத் தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய், ''உள் ளறிந்ததன்றி மற்றிவ் வூரறிந்ததில்லையே'' என்றபடி யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதோர் பொருள்'' ஆதலா னும், முத்திப்பயனைய பேரின்பத்தையும் தன்னகத்தே குறிப்பாய்க் கொண்டுள்ளதாகலானும் தொல்லாணைத் துறைபோகிய நல்லா சிரியர் இதனை அகம் என்றனர். அன்றியும் இஃது,

சொற்பால் அமிழ்திவள் யானசுவை
யென்னத் துணிந்திங்ஙனே

நற்பால் வினைத்தெய்வம் தந்தின்று
நானிவளாம் பகுதிப் பொற்பாரறிவார்''

என்ற கோவையார்ப் பகுதியகனும் இதற்கு. ''நல்வினைத் தெய்வம் உளவின்கட் கூட்ட, அமுதமும் அதன்கட்கரந்து நின்ற சுவையுமென்ன, என்னெஞ்சம் இவள் கண்ணேகரந்து ஒடுங்க, யானென்பதோர் தன்மை காணுதொழிய, இருவருள்ளமும் ஒருவேமாமாறுகரப்ப, ஒருவேமாகிய ஏகாந்தத்தின்கட் பிறந்த புணர்ச்சிப் பேரின்ப வெள்ளம் (இதனை அனுபவிக்கின்ற யானே அறியினல்லது) யாவரான் அறியப்படுமென்று மகிழ்துரைத்தான்'' எனப் பேராசிரியர் உரைத்த உரைப் பகுதியானும் உணரப்படும். இவ்வகவொழுக்கம் ஒழிந்த ஏனைய வாழ்க்கையின் முடிந்த பேருகிய வீடு பேறும், அதற்குக் கருவியாய அறஞ்செயலும், அதற்கான பொருளும் அவற்றிற்கிடையூறு நேருங்கால் ஆற்றும் போரும் பிறவுமெல்லாம் புறம் எனப்படுகின்றது.

அகத்தினைத் தொல்காப்பியம் களவு. கற்பு எனப் பகுத்துரைக்கின்றது அவற்றுள் களவு, ''இன்பமும் அறனும் பொருளுமென்றாங்கு. அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கிற், காமக் கூட்டமெனவும் அன்பினைந்திணைக் களவெனப்படுவது'' எனவும் ''களவு கற்பெனக் கண்ணிய ஈண்டையோர், உளநிகழ் அன்பின் உயர்ச்சி மேன'' எனவும் அன்பின் அடிப்படையாக அகத்துட் புறப்பதொன்றுகும் இவ்வகை ஒழுக்கத்தில் ஈடுபடும் தலைமக்கள் அதற்குயிர் நிலையாய அன்பால் ஒத்திருப்பார். அன்றியும்,

''பிறப்பே குடிமை யாண்மை யாண்டோ
டுருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு திருவென''ப்

பத்து வகை ஒப்புமைகளைக் கொண்டு விளங்கும் தலைமகனும் தலைமகளும் பிறர் கொடுப்பவும், அடுப்பவுமின்றி ஊழ்வகையால் தாமே எதிர்பட்டுக் கலக்கும் முறையே தலையாயதெனப் புலனெறி வழக்கத்தில் பயிலும் 'பிறர்க்குரியதென்று இரு முதுகுரவரால் கொடை எதிர்ந்த தலைவியை அவர் கொடுப்பக் கொள்ளாது, இருவரும் கரந்த உள்ளத்தொடு எதிர்ப்பட்டுப் புணர்ந்த'' தால் களவாயிற்றென்பர் நச்சினார்க்கினியர். மேலும், ''ஒத்த அன்பினராய் இன்பத்துறையில் நின்று இல்லறம் புரிந்தாரைப் பின்னர் வீடு பேற்றின்பம் உறுமாறு வஞ்சித்துக் கொண்டு சென்று நன்னெறிக்கண் நிறீஇனமையால் களவியல்'' ஆயிற்றெனக் காரணங் காட்டுவர் இறையனார் அகப் பொருளுரையாசிரியர். அன்றியும், இருவர் உள்ளமும் தத்தமது ஒழித்து. மற்றவர் இடத்தை

அவர் அறியாது கொள்ளை கொண்டு தங்குதலான் இவ்வொழுக்கம் களவெனும் பெயர் பெற்றது பொருத்தமாகின்றது. எனவே, தமிழ் நாட்டில் குலம், தொழில், உயர்வு, தாழ்வு முதலிய வேறுபாடுகளைக் கொள்ளாது உள்ளத்தெழுந்த அன்பினால், எக்குடிப் பிறப்பினும் யாவரேயாயினும் கலந்து, களவு நெறி நிற்பர் என்பது விளங்குகின்றது. இதனை, ''யாயும்யாயும் யாரா கியரோ'' எனத் தொடங்கும் குறுந்தொகைச் செய்யுளால் அறியலாம்.

கற்பென்பது கணவனும் மனைவியுமாய் மணம் புணர்ந்த மக்கள் தாம் மேற்கொண்ட இல்லறத்தை நல்லறமாக நடாத்தும் ஒழுக்கமாகும் கற்பென்பது கல் என்னும் பகுதியில் தோன்றித் கற்பித்தவாறு நடத்தல், கற்றபடி நடத்தல் என்னும் பொருள் தந்து நிற்கின்றது பட்டறிவும் தெளிவுங் கொண்ட இரு முதுகுரவரும் சான்றோரும், ''வையத்து வாழ்வாங்கு வாழ்க'', ''பெற்றோன் வெட்கும் பிணையை ஆகுக'', ''தற்காத்துக் தற்கொண்டாற் பேணித் தகைசார்ந்த சொற்காத்துச் சோர்விலா''ளாய் வாழ்கவெனக் கற்பித்தவாறு வாழ்க்கையை நடத்தல் கற்பாகும் இதனையே, கற்பெனப்படுவது சொற்றிறம் பாவை'' என்ற தொடரும் விளக்குகின்றது. இக்கற்பொழுக்கம் ''கற்பெனப்படுவது கரணமொடு புணரக் கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக் கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே'' எனத் தொல்காப்பியம் விளக்குகின்றது.

ஒருவனும் ஒருத்தியும் களவில் ஒழுகிய தலைமக்கள் பலரறிய மணந்துகொண்டு ஒழுகும் ஒழுக்கம் கொள்ள வேண்டியதென்னை? செம்புலப் பெயல்நீர் போல் அன்பிற் கூடிய இன்பந்துய்த்து வாழ்வது இயல்பு; அங்ஙனமே வாழ்ந்தும் வந்தார்கள். மனம் குரங்கெனப்படுதலின், கரிபொய்த்தலும், சூள் பேணாது துறத்தலும் ஒரோ வழி நடத்தலும் கூடும். அந்நிலையில் ஊர் மக்களால் எட்டியும் சுட்டியும் இழிக்கப்படும் சிலரும் பலரும் கடைக்கண்ணோக்கி மூக்கின் உச்சி சுட்டுவிரல் சேர்த்தி மறுகில் அம்பல் தூற்றவுமாகும். எனவே பலருமறிய, கொடுத்தற்குரியோர் கொடுக்கக் கொள்ளற்குரியார் கொள்ளும் நிலை ஏற்பட்டதென்க. அன்றியும் ''பிரிவின்றியைந்த துவரா நட்பொடு, இருதலைப் புள்ளின் ஒருயிராய்'' ஒழுகிய தலை மக்கள் தங்கள் நலனையேயன்றிச் சமூக நலனையும் நோக்கி வாழ வேண்டிய இல்லறத்தை ஏற்குங்கால் அச்சமுதாயத்து மக்கள் அனைவரும் அறியும் வகையில், அவ்வாழ்வைத் தொடங்குதலும் ஏற்புடைத்தாகும் இருமுதுகுரவரும், சுற்றமும் நட்பும், உற்றோரும் வயாரா உண்டு, மனமார வாழ்த்தித் தொடங்கும் நல்வாழ்வே சிறக்கும்

என்பதாலும், களவு கடந்து கற்பொழுக்க வாழ்வும், அதன் தொடக்கமாய திருமணமும் வேண்டப்படுவதாயிற்று. களவு கற்பெனும் கைகோள் இரண்டனுள் களவின் வழிவந்த கற்பொழுக்கம் சிறப்புடையது. இதனை, ''உயிரினும் சிறந்தன்று நாணே, நாணினும் செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று'' என்ற தொல்காப்பிய நூற்பா நுவல்கின்றது.

கற்பாவது கற்பித்தபடி நடத்தலென்றாகவே, கற்றற்குரியன யாவை என நோக்குதல் வேண்டும். இதனைத் திருவள்ளுவர் ''வாழ்க்கைத் துணை நல''த்தில் இனிதியம்புகின்றார். இல்லறத்தின் கடமையாக, இளங்கோவடிகளும், ''அறவோர்க்களித்தலும், அந்தணரோம்பலும் துறவோர்க்கெதிர்தலும், தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர்கோடலும்'' என எடுத்துக் காட்டுகின்றார். அதற்கு வாழ்வை, ''விருந்து புறந்தரூஉம் பெருந்தண் வாழ்''வெனப் போற்றுகின்றார். இல்லறக் கடமைகளை, ''அருந்தும் மெல்லடகு ஆரிட அருந்துமென்று அழுங்கும், விருந்து கண்டபோது என்னுறுமோ என வெதும்பும்'' என்னும் அடிகளில் கற்புக்கரசியாய சீதையின் வாயிலாய்க் கம்பநாடர் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தமை காண்க.

கற்பு என்றவுடனே அது பெண்டிற்கே உரியதென நினைத்து விடுகின்றனர். அஃது ஆடவர்க்கும் ஒப்ப உரியதும் இன்றியமையாததும் என்பதை நம் அறநூல் உறுதியாக அறுதியிட்டுரைக்கின்றது. பிறர்மனை நோக்காத பேராண்மையையும் இல்லிகவா நல்லியல்பையும் வற்புறுத்துவதுடன், வரைவின் மகளிர், பெண்வழிச் சேறல் முதலியனவைகளைத் தவிர்த்தலும் ஆடவர்க்குக் கற்பு வேண்டுமென்பதை வலியுறுத்தா நிற்கும். தொடக்கத்தில் தலைவன் தலைவியர் தாமே கடிமணம் புரிந்து வாழ்ந்து வந்தவராதல் வேண்டும். அத்தகு வாழ்வில், இணக்கம் நீங்கிப் பிணக்கமும், நல்லறம் நீங்கி அல்லறஞ் சேர்தலும் நிகழ ஏதுவாக, அன்பு மறந்து அறக் கழிவு ஒரோவழி நேர்ந்திருக்கவும் கூடுமாதலால், ஆன்றோர்கள் களவில் ஒழுகிய மக்கட்குத் திருமணம் என்ற சடங்கு நிகழ்ச்சியை ஏற்படுத்திப் பலரும் அறிய இணைந்து வாழும் முறையை ஏற்படுத்தினர். இக்கால நம்பிகளும் நங்கைமார்களும், பெற்றோர்களும், சிறப்பாகக் கல்லூரிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் பயின்று வரும் மாணவ மாணவியரும் இதைக் கருத வேண்டும். தனித்துப் பேசிப் பழக வாய்ப்புகளுள்ள இவர்கள், 'கண்டதே காதல்' என்னும் போலிப் புறக்காதல் அல்லது விலங்குணர்ச்சியாகிய காம உணர்ச்சி வயப்பட்டுத் தடுமாறிக் கூடி பின் பிரிந்து சென்று பாவப் படுகுழியில் வீழத்தக்க நிலையில் உள; இவர்கள் பலருமறியத் திருமணம் செய்து கொள்ளும் முறை;

யைக் கருதிச் செய்து கொள்ள வேண்டும். அப்படித் தமிழர் அனை வரும், ஒரே முகமாக வேறுபாடு மாறுபாடு இன்றி, தோட்டி முதல் தொண்டைமான் வரையில், தமிழ் மரபு வழுவாமல் மேற் கொண்டு ஒழுகத்தக்க ஒரே ஒரு திருமணமுறை வகுக்கப்பட்டு வழங்கி வரும் நாளே தமிழகத்தின் நன்னாளும் பொன்னாளும் ஆகும். களவு வாழ்வியலில் நாளடைவில் ஊழல்கள் புகுந்த காரணத்தினாலேயே கற்புத் திருமணமுறை சான்றோரால் வகுக்கப் பட்டதைப் "பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர், ஐயர் யாத்தனர் கரணம் என்ப' என்னும் தொல்காப்பிய நூற்பா வால் நன்குணரலாம் இதனை அடுத்து வரும், நூற்பாக்களிற் பயிலும் 'மேலோர்' 'கீழோர்' போன்ற தொடர்கட்குச் சிலர் தமிழ்ப் பண்பாட்டுக்கு மாறுபட்ட பொருந்தாவுரை கூறிவந்துள் ளனர். அவருரைத்த மாறுபட்ட வேறுபட்ட உரையெல்லாம் நாவலர் நாட்டார். டாக்டர் பாரதியார் அறிஞர் மாணிக்க நாயகர், தமிழ் மலையாம் மறைமலையடிகளார் முதலிய பைந்த மிழ்ப் பாவலர்கள் பகர்ந்த உரையாகிய கதிரவன் முன் பனியெனச் சிதறுண்டன.

தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே, சங்கத்துச் சான் றோர்களின் செய்யுட்களுக்கு முன்னரே திருமண முறைகள் இருந் திருக்க வேண்டும். அது பற்றியன்றே தொல்காப்பிய இலக்கண நூலிலும், பொருளிலக்கண வரையறை செய்யும்போது, மண முறை பற்றிய குறிப்புக்களும் காணப்படுகின்றன. கடைச் சங்க காலத்தில் (கி. பி இரண்டாம் நூற்றாண்டு - அதன் இறுதிக் காலம் திருமண முறை இருந்ததெனக் குறிப்பாயுணர்ந்த போதி லும், இது எவ்வாறு நிகழ்ந்தது எனத் தெளிவாயுணர்வதற் கேற்ற வெளிப்படை விபரங்கள் கிடைத்தில எனினும் ஒரு சில பாடல்கள் குறிப்பாகப் புகலுவதைத் துணைகொண்டு அறிவன வற்றைக் காண்போம்.

அக்காலத்து, இக்காலம் போன்று திருமணத்தை நடத்தி வைப்பதற்கெனத் தனிப்பட்ட ஒரு நடத்துபவன் (புரோகிதன்) இருந்ததாகத் தெரியவில்லை. பெற்றோரும் உற்றோரும் உடனிருந்து நடத்தி மகிழ்வதாகவே காண்கின்றோம்.

> "உழுந்து தலைப்பெய்த கொழுங்களி மிதவை
> பெருஞ்சோற் றமலை நிற்ப நிரைகாற்
> றண்பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி
> மனைவிளக் குறுத்து மாலை தொடரிக்
> கனையிருள் அகன்ற கவின்பெறு காலைக்
> கோள்கால் நீங்கிய கொடுவெண் டிங்கள்

உச்சிக் குடத்தகர் புத்தகல் மண்டையர்
பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்
முன்னவும் பின்னவும் முறைமுறை தரத்தரப்
புதல்வர் பயந்த திதலையவ் வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடிக்
சற்பினின் வழாஅ நற்பல உதவிப்
பெற்றோன் பெட்கும் பிணையை யாகென
நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்க
வதுவை நன்மணம் கழிந்த பின்றைக்
கல்லென் சும்மையர் ஞெரேரெனப் புகுதந்து
பேரிற் கிழத்தி ஆகெனத் தமர்தர"

என்னும் 86ஆம் நெடுந் தொகைப் பாடலில், திருமண முறைக் குறிப்புக்கள் சில உள. உழுந்து முதலிய இட்டுப் படைத்த உணவுத்திரள் நிறைந்திருந்த நல்ல காவணம் அமைத்து, புதுமணல் பரப்பியிருக்கத் திருவிளக்கு ஏற்றிவைக்கப்பட்டுப் பூமாலைகள் பொலிவுறத் தாங்கவிடப்பட்டன. தீக்கோள்கள் நீங்கி விளங்கும் நன்னாள். காரிருள் அகன்ற காலை நேரம். நன்னீர்க் குடங்களேந்திய முதிய பெண்டிர் கலகலவெனப் பேசிக்கொண்டு, அவற்றை முன்னும் பின்னுமாக முறையே கொண்டு வந்துதர, மகப்பேறெய்திய மங்கல மகளிர் நால்வர் அவற்றை வாங்கி, நெல்லும் மலரும் தூவி, மணமக்களை நன்னீராட்டிப் பின்னர், கற்பினில் வழாது பொற்புடன் விளங்கி, பெற்றோர் விரும்பும் பெற்றியை யாகென வாழ்த்துகின்றனர். பின்னர் பெற்றோர், 'நீ பேரிற் கிழத்தியாகுக' என வாழ்த்தி மணமக்கள்பால் கொடுக்கின்றனர். இம்முறையே குறிப்பாக இப்பாவிற் பயிலுகின்றது.

"மைப்புறப் புழுக்கின் நெய்க்கனி வெண்சோறு
வரையா வண்மையொடு புரையோர் பேணிப்
அங்கண் இருவிசும்பு விளங்கத் திங்கட்
சகடம் புணர்ந்து, கடவுட் பேணிப்
படுமென முழவொடு பருஉப்பணை இமிழ
வதுவை மண்ணிய மகளிர் விதுப்புற்று
.............................. ...
மழைப் பட்டன்ன மணல்மலி பந்தர்
இழையணி சிறப்பில் பெயர்வியர்ப்பாற்றி
தமக்கீந்த தலைநாள்"

என்ற அகநானூற்று அடிகளாலும் இது ஒருவாறு வலியுறுகின்றது. இவற்றால் திருமணத்தின்போது மணமக்களை நன்னீராட்டி,

நலம்பெற அணிவித்து மகிழ்வர் என்பதும் மணவினை மனை நன்ருக ஒப்பினை செய்யப்பட்டு நிற்கும் செய்தியும் தெளிவாகின்றன. மங்கல வாழ்த்தில், மணமனையில்,

"மாலைதாழ் சென்னி வயிரமணித் தூணகத்து
நீல விதானத்து நித்திலப் பூம்பந்தர்"

விளங்குவதை இளங்கோவும் எடுத்தியம்புவது காண்க. மணமனையில் மல்கும் மங்கல நறுமணச் சூழலை,

"சாந்தினர் புகையினர் தயங்கு கோதையர்
...... ... இடித்த சுண்ணத்தர்.
விளக்கினர் கலத்தினர் விரிந்த பாலிகை
முளைக்குட நிரையினர் ...... "

என்ற சிலப்பதிகார அடிகள் விளக்குகின்றன. 'மணவில் கமழும் மாமலைச்சாரல்' என மலைபடுகடாமும் (151) மணமனை கமழும் கானம் என அகநானூறும் (107) உவமை முகத்தானும் எடுத்து ஓதுகின்றன. மணவினையிற் பங்குகொள்ளும் பெண்டிரில் மங்கலப் பெண்டிரே சிறப்பாக வருவர் என்பதை முன்னர்க் கண்டோம் புறநானூற்றிலும், 'ஈகை அரிய இழை அணி மகளிர்' என வரும் பகுதியாலும் மனைவினையில் மங்கலப் பெண்டிரே ஈடுபடற்குரியர் என்பது புலனுகின்றது 'இழையணி'' என்பதற்கு மங்கலப் பெண்டிற்குச் சிறந்த அணியாய 'தாலி' என உரை வகுக்கின்றனர். ஈகை அரிய எ பகினைக் கொடுத்தற்கரிய எனக் கொண்டு, தாலியின் தனிப்பெருஞ் சிறப்பைக் கூறியதாகவும் கொள்ளலாம் ஈகை எனபதனைப் பொன்னுக்கிப் பொன்னலாகிய தாலி என்றும் புகலலாம். ''ஈகைவான் கொடியன்னுள்'' என்பதில் ஈகை பொன்னுப் பொருளில் பொருந்தியது காண்க. எப்பொழுது தாலி கட்டப்படும் என்ற விவரங்களுக்குச் சான்றுகள் காணப்படுவதில்லை இது இன்னும் ஆராய்தற்குரியது.

---

## வாசகர் கவனத்திற்கு.....

தவிர்க்கமுடியாத சூழ்நிலைகளால்
மாசி மாதப் 'புத்தெழில்''
வெளிவர முடியவில்லை.

வாசக அன்பர்கள் இக்குறையை பெருமனத்துடன் பொறுத்து இவ்விதழை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்
இனி இத்தவறுகள் ஏற்படமாட்டாது.

— ஆசிரியர் —

---



Jatharthanan
10/07/94

மாணவ மணிகளின் உதயசூரியன்

# A/L கலை வர்த்தக விஞ்ஞான வகுப்புக்களுக்குச் சிறந்த நிறுவனம்

# சுகன் இன்ஸ்ரியூட்

அச்சுவேலி

**கிளை: இடைக்காடு**

**கலை, வர்த்தகப் பிரிவு ஆசிரியர்**

| | |
|---|---|
| பொருளியல் | திரு. லோகலிங்கம் |
| வர்த்தகமும் நிதியும் | திரு. கேதீஸ் |
| கணக்கியல் | திரு. கணேசலிங்கம்<br>திரு. சிறி |
| அளவையியல் | திரு. விக்கி |
| தமிழ் | திரு. ஞானம் |
| இந்து நாகரீகம் | திரு. காரை |
| புவியியல் | திரு. கந்தசாமி<br>திரு. சிவமூர்த்தி |

**விஞ்ஞானப் பிரிவு ஆசிரியர்**

| | |
|---|---|
| இரசாயனவியல் | திரு. தில்லை |
| பௌதிகவியல் | திரு. விக்கி |
| தாவரவியல் | திரு. பாலா |
| விலங்கியல் | திரு. ஞானேந்திரன் |
| தூயபிரயோக கணிதம் | திரு. நல்லையா |

புதிய வகுப்புக்கள் ஆண்டு 9, 10, 11 ஆரம்ப மாகிவிட்டன.

## சூரியா பார்மஸி

**பஸ்நிலைய முன்பாக அச்சுவேலி**

எங்களிடம் சகல விதமான ஆங்கில மருந்துகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாயமான விலையில பெற்றுக் கொள்ளலாம்.

**மற்றும் குழந்தைகளுக்கான**

பால்மா வகைகள், ஓடிக்கொலோன், ஒலிவ்ஓயில் மற்றும் தேன், நெய் ஆயுள்வேத மருந்து வகைகள் விளைவுசூடம் என்பவற்றையும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

காலநடை வைத்தியர்களால் சிபாரிசு செய்யப்பட்ட கோழிக்குஞ்சுகள், வெள்ளை சேவற்குஞ்சுகள் கறுப்புவரிக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள், பிறவுன் பேட்டுக் குஞ்சுகள்) என்பவற்றை நம்மிடம் ஓடர் கொடுத்து பெற்றுக்கொள்ளலாம்

உங்கள் ஆதரவிற்கு நன்றி

# சூரியா பார்மஸி

**பஸ்நிலையம் அச்சுவேலி**



இச்சஞ்சிகை ஆசிரியர் திரு மு திருஞானசேகரம் அவர்களால் சுடரொளி அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது